# அகஸ்தியர்

# இரண வைத்தியம்

சரஸ்வதி புத்தகசாலை 175 செட்டியார்தெரு
கொழும்பு.
ESTD. 1921

உ

# அகஸ்தியர்
# இரண வைத்தியம்

★

இவை

**V. A. T. ராஜன்**

அவர்களால் பல ஏட்டுச்

சுவடிகளிலிருந்து சேகரிக்கப்பட்டது.

9197 c.c

★

பதிப்பாளர்:

**சரஸ்வதி புத்தகசாலை**

175, செட்டியார் தெரு, கொழும்பு.

உரிமைபெற்றது]

[விலை ரூபா 2-50

# உரிமை அறிவிப்பு


இதனல் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் சென்னை முத்தியாலுப்பேட்டை. V. A. T. ராஜன் அவர்களால் இயற்றப் பெற்ற **அகஸ்தியர் இரண வைத்தியம்** என்னும் புஸ்தகத்தை வெளியிட நான் மேற்படியாரிடம் இருந்து சகல சுதந்திரத்துடன் பெற்றுக்கொண்டேன். ஆகையால் இந்த புஸ்தகத்தை இதரமானவர்கள் எந்தப் பாஷையிலும் அச்சிடலாகாதென்று கனம் பொருந்திய கவர்மெண்டார் சட்டப்படி ரிஜிஸ்டர் காபிரைட் செய்யப் பெற்றிருப்பதை என் அனுமதியின்றி அச்சிட்டால் நான் கோரும் நஷ்டத்தை அச்சிட்டவரிடமிருந்து வசூல் செய்யப்படும். அல்லாமலும் காபிரைட்டு உல்லங்கனம் செய்த குற்றத்திற்கு உள்படுவார் என்பதை தெரியப்படுத்துகிறேன்.

இப்படிக்கு,

**S. பத்மநாப ஐயர்.**




## அனேக வைத்தியர்கள் கையாண்டு வரும்

## அகஸ்தியர்

# இரண வைத்தியம்

### கொருக்கு முதலிய இரணங்களுக்கு களிம்பு

| | | |
|---|---|---|
| துருசு | விராகனிடை | 5 |
| மிருதார் சிங்கு | ,, | $1\frac{1}{2}$ |
| மெழுகு | ,, | 12 |
| வெள்ளை குங்கிலியம் | ,, | 9 |
| நல்லெண்ணெய் | பலம் | 5 |
| தலைமண்டையோடு | ,, | 1 |

ஒரு பெருஞ்சட்டியில் எண்ணெயை ஊற்றி மெழுகைப் போட்டுக் காய்ச்சி உருகினவுடன் மற்ற மருந்துகளை தூள் செய்து போட்டுக் காய்ச்சி, ஒரு பெருஞ் சட்டியில் தண்ணீர் விட்டு அதில் காய்ச்சிய மருந்தைச் சாய்த்து கையால் பிசைய வெண்ணெய்போல் வரும். அதை யெடுத்து சீலையில் தடவி கொருக்கு, குழிப்புண், மேகரணம் இதுகட்குப்போட மூன்று வேளையில் தீரும்.

### கொருக்கு முதலிய புண்களுக்கு மேற்பூசும் முலாம்

| | | |
|---|---|---|
| மிருதாருசிங்கு | விராகனிடை | $1\frac{1}{4}$ |
| கெந்தி | ,, | $1\frac{1}{4}$ |
| பூரம் | ,, | $1\frac{1}{4}$ |
| குங்கிலியம் | ,, | $1\frac{1}{4}$ |
| பால்துத்தம் | ,, | $1\frac{1}{4}$ |

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு தேங்காநெய்விட்டு மைபோல் அரைத்து அதில்

முறையே ஏழு தரம் ஜலங் விட்டு அரைத்துக் கழுவி விழித் தெடுத்து வைத்துக்கொண்டு அரையாப்பு, கொருக்கு, முதலிய இரணங்களுக்கு மேல் பூச ஆறியுலரும்.

### ஆருத புண்களுக்கு மூலரம்

| | | | |
|---|---|---|---|
| சாம்பிராணி | விராகனெடை | ஒன்னே முக்கால் |
| மயில்துத்தம் | ,, | ,, |
| கருங்குங்கிலியம் | ,, | ,, |
| துருசு | ,, | 7 |
| கஞ்சா | பலம் | 1 |

இந்த ஐந்து தினுசு மருந்துகளையும் கல்வத்திலிட்டு நல் லெண்ணெய் விட்டு நன்ருய் அரைத்து தண்ணீர்விட்டுக் கழுவி யெடுத்து சீலையிற் றடவி பலவித ரணங்கள், சிங்கி, நீர்ச்சிங்கி அழற்சிங்கி, தெளிசிங்கி, சுணைகள், தீராரோகங்கள், பரங்கிப் புண்கள், கால்கடுவான், கால்புற்று இவையாவும்மாறி ஒழிந்து ஆறிவிடும்.

### கிரந்திக்கு மூலரம் (சதைகரைக்க)

| | | |
|---|---|---|
| அரிதாரம் | காசெடை | 1 |
| துருசு | ,, | 4 |
| சுன்னம் | ,, | 6 |
| சிவந்த குங்கிலியம் | ,, | 4 |

ஆக இந்த நான்கு சரக்கையும் கல்வத்திலிட்டு, நல்லெண் ணெய் விட்டு நன்ருய் அரைத்து ஜலம் விட்டுக் கழுவியெடுத்து துணியில் தடவி பலவித சிங்கிகள், இரத்த சிங்கி, மூலை மூலம் ஆறுக்கும், பரங்கிப்புண் கிரந்திகள், தடிப்புகள், திமிர்கள், நீர்ப்பாய்ச்சல், நாட்பட்ட புண்கள், கடுப்பு முதலியவைகளுக் குப் போட்டுவர யாவும் ஆறி அகன்று விடும்.



### மொலரம்

| | | |
|---|---|---|
| லிங்கம் | பலம் | $\frac{1}{4}$ |
| முதார்சிங்கி | ,, | $\frac{1}{4}$ |
| பூரம் | ,, | $\frac{1}{4}$ |

இந்த மூன்று தினுசை மைபோலரைத்து படிகாரம் கால ரிக்காபலம் சிறு நெருப்பில் வைத்து பொங்கினபிறகு சூரணத் துடன் வைத்து நான்கையும் மைபோலரைத்து பசும் வெண் ணெய் ஒருபலம் போட்டு நெகிழ அரைத்து ஒரு பரணியில் வழித்துக் கொள்ளவும். கடுக்காய், காசிகட்டி தினுசு ஒன் றுக்கு கால்பலம் கொண்டு வந்து யிடித்து ஒரு பாத்திரத்தில் ஒருபடி தண்ணீர் விட்டு இந்த தூளை கொட்டி காய்ச்சி அரை படி ஜலத்துக்கு இறக்கி ரணத்தைக் கழுவி இந்த முலாமைப் போடவும். ஆருத ரணம் ஆறும்.

### கரப்பான் வியாதிக்கும், ரணத்திற்கும் உள்ளுக்கும் மேலுக்கும் எண்ணெய்

| | | |
|---|---|---|
| கருநொச்சியிலை | பிடி | 1 |
| சிறுகுறிஞ்சான் | ,, | 1 |
| சுன்னி இலை | ,, | 1 |
| சாணுக்கி | ,, | 1 |
| சிவகரந்தையிலை | ,, | 1 |

விளக்கெண்ணெய் 1-பலத்தில் இவை யாவும் அரைத்துக் கரைத்து.

| | | |
|---|---|---|
| வசம்பு | பலம் | $\frac{1}{2}$ |
| கடுகுருனி | ,, | $\frac{1}{2}$ |
| பூண்டு | ,, | $\frac{1}{2}$ |

பொடித்துப்போட்டு காய்ச்சி யிறக்கும்போது ரசகற்பூரம் 2-விராகனெடை எண்ணெய்விட்டு அரைத்துக் கலக்கி யிறக்க வும். உள்ளுக்கு கரண்டிவீதம் கொடுத்து மேலுக்கும் பூசிவர எவ்வித சிரங்கும் ஆறிவிடும்.

### சர்வ ரணங்களுக்கும் முலாம்

| | | |
|---|---|---|
| சாம்பிராணி | விராகனெடை | $1\frac{1}{4}$ |
| பால்துத்தம் | ,, | $1\frac{1}{4}$ |
| கருங்குங்கிலியம் | ,, | $1\frac{1}{4}$ |
| மயில்துத்தம் | ,, | $1\frac{1}{4}$ |

இந்த நாலு தினுசுகளையும் பச்சை வெட்டாக நிறுத்தெடுத்துக் கல்மத்திலிட்டு மைபோல் அரைத்துப் பின்பு அதில் முறையே ஏழுதரம் சலம் விட்டு கழுவி முலாமை வழித்தெடுத்து ஒரு பீங்கானில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு சிங்கி, தீராத நீர்சிங்கி. வழற்சிங்கி, கால்களில் உண்டாகும் புற்று, இவைகளுக்கு இந்த முலாமை சீலையிற்றடவி இரணத்தின்மேல் போட்டுக் கொண்டுவர, கூடிய சீக்கிரத்தில் ஆறி உலர்ந்துவிடும் நோய் தீரும் நெல்லெண்ணை பலம் 1.

### சதை கரைக்கவும் கிரந்திக்கும் முலாம்

| | | |
|---|---|---|
| பாக்ஷாணம் | காசெடை | 1 |
| அரிதாரம் | ,, | 1 |
| மயில்துத்தம் | ,, | 4 |
| சிவந்த குங்கிலியம் | ,, | 6 |

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு நல்லெண்ணெய்விட்டு மைபோல் அரைத்து பின்பு அதில் முறையே ஏழுதரம் சலம் விட்டுக் கழுவி முலாமை வழித்தெடுத்து ஒரு யேனத்தில் வைத்துக்கொண்டு சதைவளர்ந்திருக்கும் இரணங்களுக்கும் கிரந்திக்கும் இந்த முலாமைச் சீலையிற் றடவிப் போட்டுக் கொண்டுவர சதையைக் கரைக்கும் கிரந்தி முதலான விரணங்களை ஆற்றும்.

### கண்ட மாலைக்கு மேற்பூசுந் தைலம்

| | | |
|---|---|---|
| வேப்பெண்ணெய் | விராகனிடை | 1 |
| நற்கிரந்தி | ,, | 1 |
| துருசு | ,, | 1 |



| | | |
|---|---|---|
| தாரம் | விராகனிடை | 1 |
| உள்ளி | ,, | 1 |
| கெந்தி | ,, | 1 |
| துத்தம் | ,, | 1 |
| முதார் சிங்கு | ,, | 1 |
| வெம்பாடம் பட்டை | ,, | 1 |
| சூதம் | ,, | 1 |
| குங்கிலியம் | ,, | 1 |

மேல்கண்ட சரக்குகளை எடுத்து மேற்படி எண்ணெய் விட்டே யரைத்து கரைத்து சூரியபுடம் வைத்தெடுத்து கோழி யிறகினல் தடவிக்கொண்டு வரவும் தீரும். அன்றியும் எவ்வித சிரங்கிற்கும் தடவலாம்.

### சிங்கரணத்திற்குப் பச்சை சேர்வை சீலை

| | | |
|---|---|---|
| இலிங்கம் | விராகனிடை | $1\frac{1}{4}$ |
| மயில்துத்தம் | ,, | $2\frac{1}{2}$ |
| மிருதாருசிங்கி | 20-குண்டுமணியடை | |
| குங்கிலியம் | பலம் | 3 |

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய் விட்டு மைபோல் அரைத்து பின்பு சலம் விட்டுக் கலக்கி கழுவியெடுத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு இரத்த சிங்கி, கிரந்தி, தடிப்பு, திமிர், நீர்பாச்சல் இவைகளுக்கு இந்த சேர்வையை சீலையில் நனைத்து போட்டுக் கொண்டுவர சகல இரணங்களும் ஆறும் முலை வெளியாகும்.

### வெட்டு காயத்திற்கு

வெட்டுகாய மாறுவதெவ்வாறெனில் இரசகர்ப்பூரம் பேன் கொட்டை, யேலரிசி, தேங்காய்பத்தை இவைகளை யிடித்து தூள்செய்து நல்லெண்ணையிற் கூட்டி அரைத்து அதை செப்புச்சிமிளில் வழித்தெடுத்து வெய்யலில் காயவைத்து மனிதரை

அடித்தல், வெட்டுதல், குத்துதல் முதலிய காயங்களில் தடவிக்கொண்டு வரவும் காய ரணங்கள் உடனே ஆறிவிடும் அந்த வடுவுகளும் மாறிவிடும்.

### பச்சை சேர்வை

| | | |
|---|---|---|
| வெள்ளை | விராகனெடை | $1\frac{1}{4}$ |
| கெவுரி | ,, | $1\frac{1}{4}$ |
| அரிதாரம் | ,, | $1\frac{1}{4}$ |
| மஞ்சள் | ,, | $1\frac{1}{4}$ |
| நீலம் | ,, | $1\frac{3}{4}$ |
| கஞ்சா | பலம் | 2 |

இவ்வாறு தினுசுகளையும் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய் விட்டு அரைத்து மறுபடியும் நல்ல சலம் விட்டரைத்துக் கழுவியூற்றி அதை வழித்து வைத்துக்கொண்டு துணியிற் பூசி பலவிதமாகிய ரணங்கள்மேற் போட்டு வரவும் பலவித சிங்கி, பிளவை, கட்டி, சதையடைப்பு, முளைவராதது, குத்தல் அரணை சிலந்தி, ஆருத ரணங்கள் முதலியதனைத்தும் ஆறி ஒழிந்துவிடும்.

### வேறு பச்சை களிம்பு

| | | |
|---|---|---|
| கெவுரி | விராகனிடை | $1\frac{1}{4}$ |
| மிருதார்சிங்கி | ,, | $1\frac{1}{4}$ |
| துருசு | ,, | 7 |

இந்த மூன்று தினுசுகளையும் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய் விட்டு நன்ருய் அரைத்து இதோடு இண்ணம் அரிதாரம் விராகனிடை $10\frac{1}{2}$-கூட்டி மறுபடியும் அரைத்து சலம் விட்டுக் கழுவி வழித்தெடுத்து சீலையில் தடவி ஊன்வளர்ந்த சதை, கரையாவுட்சதை, முள்ளுமுள்ளாயுள்ள தொடச்சதை, பரங்கிப்புண், மார்பிளவை, ரணங்கள்மேற் போட்டுவரவும். ஆருத ரணங்கள் யாவும் அகன்று விடும்.



### சிங்கி ரணத்திற்கு சேர்வை சீலை

| | | |
|---|---|---|
| கெவுரி பாஷாணம் | விராகனிடை | $1\frac{1}{4}$ |
| அரிதாரம் | ,, | $1\frac{1}{4}$ |
| மஞ்சள் | ,, | $1\frac{1}{4}$ |
| நீலம் | ,, | $1\frac{1}{4}$ |

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய் விட்டு மைபோல் அரைத்து பின்பு சலம் விட்டரைத்துக் கழுவி வழித்து ஒருயேனத்தில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு சிங்கி, பிளவை, சதை வளர்ந்திருக்கும் ரணம், முளை ஆருதயிரணங்கள் இவைகட்கு இந்த சேர்வையை சீலையில் தடவிப் போட்டுக்கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறி உலரும்.

### வேறுவித பச்சை சேர்வை சீலை

| | | |
|---|---|---|
| கெவுரிபாஷாணம் | விராகனிடை | $1\frac{1}{4}$ |
| மிருதாருசிங்கி | ,, | $1\frac{1}{4}$ |
| மயில்துத்தம் | ,, | $2\frac{1}{2}$ |
| அரிதாரம் | ,, | $2\frac{1}{2}$ |

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு நல்லெண்ணை விட்டு மைபோல் அரைத்து பின்பு ஜலம் விட்டுக் கழுவிவழித்தெடுத்து வைத்துக் கொண்டு உட்சதை வளர்ந்திருக்கும் ரணம் மார்பில்காணும் பிளவை இவைகட்கு இந்த சேர்வையை சீலையிற்றடவி ரணத்தின்மேல் போட்டு கொண்டு வர உட்சதைகளைக் கரைக்கும் இரணத்தையாற்றும்.

### வேறுவித பச்சை சேர்வை சீலை

| | | |
|---|---|---|
| நிமிளை | விராகனிடை | $1\frac{1}{4}$ |
| பாதரசம் | ,, | $1\frac{1}{4}$ |
| பாஷாணம் | ,, | $1\frac{1}{4}$ |

| | | |
|---|---|---|
| மிருதாருசிங்கி | விராகனிடை | $1\frac{1}{4}$ |
| அரிதாரம் | ,, | $1\frac{1}{4}$ |
| சுண்ணும்பு | பலம் | 1 |

இந்த ஆறு தினுசுகளையும் பச்சை வெட்டாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு இரண்டுபலம் நல்லெண்ணெய் வார்த்து மைபோல் அரைத்து பின்பு சலம்விட்டுக் கழுவியெடுத்து வைத்துக்கொண்டு சூலைகிரந்தி, பிளவை, பவுந்திரம் இவைகளுக்கு இந்த சேர்வையை சீலையிற்றடவிப் போட்டுக் கொண்டுவர இரணங்கள் ஆறி கூடிய சீக்கிரத்தில் உலரும்.

### அரையாப்புக்கு களிம்பு

| | | |
|---|---|---|
| வெள்ளைபாஷாணம் | விராகனிடை | $1\frac{1}{4}$ |
| கெவுரி | ,, | $1\frac{1}{4}$ |
| இரசம் | ,, | $1\frac{1}{4}$ |
| அரிதாரம் | ,, | $1\frac{1}{4}$ |
| மிருதார்சிங்கி | ,, | $1\frac{1}{4}$ |
| கஞ்சா | பலம் | 4 |
| குங்கிலியம் | ,, | 1 |

இவ்வேழு மருந்துகளையும் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய் விட்டு நன்ருய் அரைத்து ஜலத்திற்கழுவி அதை வழித்து வைத்துக்கொண்டு துணியிற்பூசி பறங்கிப்புண்; கடிவிஷம், சூலை, அரையாப்பு, பிளவை, பவுந்தி, பாம்புகடி, குட்டம், வெடித்த புண், சன்னி, தவளைச்சொரிக்கு மேற்போட யாவுந்தீரும் இதை ஏழுமுறை தண்ணீர் வார்த்து வார்த்துக் கழுவவும்.

### வேறுவித களிம்பு

| | | |
|---|---|---|
| குக்கில் | பலம் | $\frac{1}{4}$ |
| துருசு | ,, | $\frac{1}{4}$ |
| துத்தம் | ,, | $\frac{1}{4}$ |
| இரசம் | ,, | $\frac{1}{4}$ |



| | | |
|---|---|---|
| கற்பூரம் | பலம் | $\frac{1}{4}$ |
| விழாம்பிசின் | ,, | கால் |
| கஞ்சா | ,, | 2 |

இவ்வேழு மருந்துகளையும் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய் விட்டு நன்ருய் அரைத்து தண்ணீர் விட்டுக் கழுவி வழித்தெடுத்து வஸ்திரத்திற்பூசி பரங்கிப்புண், சிங்கிகள், பிளவை, பவுத்திரம், இரண முதலியவைகளுக்குப் போட்டு வரவும், சகல புண் புரைகளும் ஆறிவிடும்.

### இன்னுமோர் களிம்பு

| | | |
|---|---|---|
| மயில்துத்தம் | பலம் | கால் |
| திமிளை | ,, | கால் |
| துருசு | ,, | கால் |
| மிருதார்சிங்கி | ,, | கால் |
| அரிதாரம் | ,, | கால் |
| கஞ்சா | ,, | 3 |

இந்த ஆறுதினுசு மருந்துகளையும் கல்வத்திற்போட்டு நன்ருய் பொடித்து நல்லெண்ணெய் அல்லது வெண்ணெயிலரைத்து தண்ணீர் விட்டுக் கழுவி யெடுத்து பலவித சிங்கி, கிரந்தி, லிங்கப்புத்து, மூலம், பவுத்திரம், சிலந்தி, கடிவிஷம், பிளவை, வல்லை, துடைவாழை இவைகளுக்கு துணியிற்றடவி மேற்போட்டு வரவும், யாவும் ஆறிவிடும்.

### அரையாப்பு கட்டிக்கு பத்து

சவுக்காரம், சித்தண்டை, வெள்ளை இவை மூன்றும் சமனுக வெடுத்து நீர்விட்டு அரைத்துக் கட்டியின்மேல் பூசிக் கொண்டுவரக் கரையும் கரையாவிட்டால் அதன்மேல் புளியும் சேராங்கொட்டையும் சேர்த்து அடைதட்டி வைத்துக் கட்டி

மூன்றும்நாள் கட்டு அவிழ்க்கவும் இதுபோல் புளியும் வெள்ளை பாஷாணமும் கால்பலம் சேர்த்து பில்லைதட்டி வைத்துக் கட்டலாகும்.

### அரையாப்புக்கு களிம்பு

| | | |
|---|---|---|
| வெள்ளை பாஷாணம் | விராகனிடை | ஒன்றேகால் |
| கெவுரிபாஷாணம் | ,, | ஒன்றேகால் |
| பாதரசம் | ,, | ஒன்றேகால் |
| அரிதாரம் | ,, | ஒன்றேகால் |
| மிருதார்சிங்கு | ,, | ஒன்றேகால் |
| குங்கிலியம் | பலம் | 4 |

இந்த ஆறுதினுசுகளையும் பச்சை வெட்டாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு ஒருபலம் நல்லெண்ணெய் விட்டு மைபோல் அரைத்து பின்பு ஜலம்விட்டுக் கழுவியெடுத்துக் கொண்டு கடி விஷங்களுக்கும் சூலை, அரையாப்பு, பிளவை, பவுத்திரம், குஷ்டம், வெடிஜன்னி இவைகளுக்கு சீலையிற்றடவி மேற்போட சகலவிஷமும் நீங்கும் இரணம்ஆறும் கட்டியுடையும் ஏழுமுறை தண்ணீர் விட்டுக் கழுவவும்.

### அரையாப்பு கட்டிக்கு வேறுவித களிம்பு

| | | |
|---|---|---|
| குங்கிலியம் | பலம் | கால் |
| மயில்துத்தம் | ,, | கால் |
| பால்துத்தம் | ,, | கால் |
| இலிங்கம் | ,, | கால் |
| கர்ப்பூரம் | ,, | கால் |
| விளாம்பிசினி | ,, | கால் |

இந்த ஆறுதினுசுகளையும் பச்சை வெட்டாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு இரண்டுபலம் நல்லெண்ணெய்விட்டு மைபோல் அரைத்து பின்பு முறையே ஏழுதரம் தண்ணீரில் கழுவி வழித்தெடுத்து வைத்துக் கொண்டு சிங்கி, பிளவை, பவுத்திரம் அரையாப்பு கட்டி ஆறுதவிரணம் இவைகட்கு சீலையில் தடவி மேல்போட்டுவரக் கட்டியுடையும் ரணம்ஆறும்.



### அரையாப்பு கட்டிக்கு வேறுவித களிம்பு

| | | |
|---|---|---|
| பால்துத்தம் | பலம் | கால் |
| நிமிளை | ,, | கால் |
| மயில்துத்தம் | ,, | கால் |
| மிருதார்சிங்கு | ,, | கால் |
| அரிதாரம் | ,, | கால் |

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு மூன்றுபலம் நல்லெண்ணெய், நெய், வெண்ணை, இவைகளால் அரைத்து வழித்தெடுத்து வைத்துக் கொண்டு தண்ணீர் வடிகின்ற சிங்கி, கிரந்தி, மூலம், பவுத்திரம், கடிவிஷங்கள் பிளவை, துடைவாழை, இவைகட்கு இந்தக் களிம்பை சீலையிற்றடவி மேலே போட்டுக் கொண்டுவர சர்வவிஷமும் நீங்கும் இரணம் ஆறும் கட்டியுடைந்து ஆறும்.

### கிரந்திக்கும் யோனிப்புத்துக்கும் காரசீலை

| | | |
|---|---|---|
| நீலம் | பலம் | ½ |
| அரிதாரம் | ,, | ½ |

இந்த இரண்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு இரண்டுபலம் நல்லெண்ணைவிட்டு அரைத்து பின்பு தண்ணீர் விட்டரைத்துக் கழுவியெடுத்துக் கொண்டு இரணம், உதிரகிரந்தி, உள்வீக்கம், நாய்முள்ளு, அரிகிரந்தி, ஆருப்புண்கள், பவுந்திரம், இவைகட்கு சீலையிற் தடவி இரணங்களின் மேல் போட்டுக் கொண்டுவரவும்.

## வேறுவிதக் காரசீலை

| | | |
|---|---|---|
| மயில்துத்தம் | விராகனிடை | ஒன்றேகால் |
| அரிதாரம் | ,, | ஒன்றேகால் |
| இலிங்கம் | ,, | ஒன்றேகால் |
| கெந்தகம் | ,, | ஒன்றேகால் |
| பாதரசம் | ,, | ஒன்றேகால் |
| வெங்காயம் | ,, | ஒன்றேகால் |
| வெள்ளெருக்கம்பூசார் | பலம் | 1 |

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு ஊமத்தின்காய் சார்விட்டு அரைத்து சீலையில் ஏற்றி உலர்த்தி வைத்துக் கொண்டு ஆறுதவிரணம், சூலை, வெடிப்பு, கிரந்தி, குஷ்டம், இரத்தக் கிரந்தி, பவுந்திரம் இவைகட்கு இந்தசீலையை மேலேபோட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் இரணங்களாறும்.

## சகல ரணங்களுக்கு தைலம்

| | | |
|---|---|---|
| பாதரசம் | பலம் | கால் |
| காந்தபாஷாணம் | ,, | கால் |
| கெந்தகம் | ,, | கால் |
| அரிதாரம் | ,, | கால் |
| லிங்கம் | ,, | கால் |

இந்த ஐந்து தினிசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு பரித்திப்பாலும் நல்லெண்ணை விட்டு மைபோலரைத்து வழித்தெடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு ஆறுதவிரணம் ரத்தங்கட்டிக் கொண்டிருக்குஞ் சதைகள் பிளவை பவுத்திரம் குஷ்டம் இவைகட்கு இந்த தைலத்தை சீலையிற்றடவி மேலே போட்டுக் கொண்டுவர சகல ரணங்களும் ஆறும் முளை ஆணி யிவைகள் வெளியாதம்.



## சகல ரணங்களுக்கு உள்ளுக்கு சாப்பிடும் தைலம்

| | | |
|---|---|---|
| நாபி | விராகனிடை | ஒன்றேகால் |
| பாதரசம் | ,, | ஒன்றேகால் |
| கெந்தகம் | ,, | ஒன்றேகால் |
| வெள்ளை பாஷாணம் | ,, | ஒன்றேகால் |
| அரிதாரம் | ,, | ஒன்றேகால் |
| மிருதார்சிங்கி | ,, | ஒன்றேகால் |
| வெண்காரம் | ,, | ஒன்றேகால் |
| கஞ்சா | ,, | ஒன்றேகால் |
| நிமிளை | ,, | ஒன்றேகால் |
| பால்துத்தம் | ,, | ஒன்றேகால் |
| மயில்துத்தம் | ,, | ஒன்றேகால் |
| லிங்கம் | ,, | ஒன்றேகால் |
| மனோசிலை | ,, | ஒன்றேகால் |
| கவுரிபாஷாணம் | ,, | ஒன்றேகால் |
| தாளகம் | ,, | ஒன்றேகால் |
| ஜாதிலிங்கம் | ,, | ஒன்றேகால் |
| இந்துப்பு | ,, | ஒன்றேகால் |

இந்த பதினேழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து சுத்தி செய்து கல்வத்திலிட்டு எருக்கன்பால் வார்த்து ஒருநாள் முழுதும் அரைத்து பின்பு சதுரக்கள்ளியின் பாலினால் இரண்டுநாள் ஆறுஜாமம் அரைத்து சீலையில் ஊட்டி திரிசெய்து நிழலிலுலர்த்தி வேப்பெண்ணையில் தோய்த்து விளக்கில் பத்தவைக்க அதில் தைலம் சொரியும் அதைக் குப்பியில் பிடித்து அடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு காலையில் பணவிடை வீதம் பனிரெண்டு நாள் உள்ளுக்குக் கொடுத்துவர சகல விரணங்களும் ஆறி உலரும் இரணங்களின் மீதுப் பூசிக் கொண்டுவர வேண்டும்.

### வேறுவித வெள்ளைகார சீலை

| | | |
|---|---|---|
| வெள்ளை பாஷாணம் | பலம் | 1 |
| கெவுரி பாஷாணம் | ,, | 1 |
| குங்கிலியம் | ,, | 1 |
| வெள்ளை சவுடு | ,, | 1 |

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமம் வெள்ளை துணிசேர்த்து இடித்துப் பொடிசெய்து ரணங்களின் மீது போட்டுக்கட்ட சகல இரணங்களும் ஆறிவிடும்.

### முளை விழுத்த கறுப்பு காரசீலை

| | | |
|---|---|---|
| கவுரி பாஷாணம் | பலம் | 1 |
| அரிதாரம் | ,, | 1 |
| சுண்ணம் | ,, | ½ |
| பால்துத்தம் | ,, | ½ |
| மிருதார்சிங்கி | ,, | ½ |
| வெள்ளை பாஷாணம் | ,, | 1 |
| குங்கிலியம் | ,, | 1 |

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து இதற்குச் சமனுக மஞ்சள் பொடி சேர்த்து சீலையில் வைத்து முளையின் மீது வைத்துக் கட்ட முளையானது அற்றுவிழும் உபாதைதீரும்.

### வேறுவிதக் காரசீலை

| | | |
|---|---|---|
| வெள்ளை பாஷாணம் | விராகனிடை | ஒன்றேகால் |
| அரிதாரம் | ,, | ஒன்றேகால் |
| கெவுரி பாஷாணம் | ,, | ஒன்றேகால் |
| மஞ்சள் | ,, | ஒன்றேகால் |
| மிருதாருசிங்கி | ,, | ஒன்றேகால் |
| நீலம் | ,, | 5 |
| பச்சை குங்கிசுயம் | ,, | 1 |



இவைகளை நிறுத்தெடுத்து அதற்குச் சமனுக துணியைச் சேர்த்து யிடித்துப் பொடித்து எவ்விதமான இரணங்களுக்கும் ஆருத புண்களுக்கும் மேலே போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறிவுலர்ந்துவிடும்.

### வேறுவித பொன்சிகப்பு காரசீலை

| | | |
|---|---|---|
| லிகிதம் | பலம் | 1 |
| காவிச்சீலை | ,, | 1 |
| மஞ்சள் | ,, | 1 |
| வெள்ளை பாஷாணம் | ,, | 1 |
| சங்கு | ,, | 1 |

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெத்து அதற்குச் சமனுக சீலைசேர்த்து இடித்துப் பொடித்து முளைகள் மீதுவைத்துக் கட்ட முளையானது வெளிவந்துவிடும் பொன்சிகப்பு நிறமுள்ள இரணங்கள் ஆறும் ஆனல் பழைய துணிகந்தையைச் சேர்க்க வேண்டும்.

### மஞ்சள் வர்ண பிளவைக்கு பொன்சிகப்பு காரசீலை

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | கால் |
| வசம்பு | ,, | கால் |
| நீலம் | ,, | கால் |
| வெள்ளை பாஷாணம் | ,, | கால் |
| மிருதார்சிங்கி | ,, | கால் |
| தலைமண்டை ஓடு | ,, | கால் |

இவைகளை நிறுத்தெடுத்து இடித்துப் பொடித்து அதற்குச் சமன் பழந்துணியைச் சேர்த்து இடித்த மஞ்சள் வர்ணம் பிளவைரோக இரணங்களுக்கு இந்தக் காரசீலையை போட்டுக்

கொண்டுவர இரணங்கள் ஆறும் ஆனல் மஞ்சள் வசம்பு இவை இரண்டையும் சுட்டுக் கரியாக்கி மேற்கண்ட யிடைகள் போல் சேர்க்க வேண்டியது.

### மூலத்திற்கு குளிர்ந்த பச்சைக் காரசீலை

| | | |
|---|---|---|
| மிருதார்சிங்கி | பலம் | கால் |
| கெவுரி பாஷாணம் | ,, | கால் |
| அரிதாரம் | ,, | கால் |
| வெள்ளை பாஷாணம் | ,, | கால் |
| மயில்துத்தம் | ,, | கால் |

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமன் பழந்துணி சேர்த்து நொருங்க இடித்துப் பொடியாக்கி பவுந்திரம் மூலம் குஷ்டம் இவைகளுக்கு மேல்போட்டுக் கொண்டுவர சீக்கிரத்தில் ஆறும்.

### வேறுவித வெள்ளைக் காரம்

| | | |
|---|---|---|
| தலைமண்டை ஓடு | பலம் | கால் |
| சங்கு | ,, | கால் |
| வெள்ளை பாஷாணம் | ,, | கால் |

இந்த மூன்று தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனுக துணிகூட்டி பொடியாக இடித்து எடுத்து பொறுக்க முடியாத யெரிவந்தத்தோடு நீர்வடியும் புண் பிளவை பவுத்திரம் பரங்கி எறிசூலை இவைகளுக்குமேல் போட்டு உபயோகப்படுத்திக் கொண்டுவர மேற்கூறிய விரண முதலானதும் ஆறி உலரும்.

### வேறுவித பச்சை காரம்

| | | |
|---|---|---|
| மிருதாருசிங்கி | பலம் | கால் |
| சங்கு | ,, | கால் |
| மஞ்சள் | ,, | கால் |
| கருங் குங்கிலியம் | ,, | கால் |



இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனுக வெள்ளை துணிசேர்த்து இடித்துப் பொடித்து பரங்கிப் புத்து பிளவை பவுத்திரம் ஆருத இரணங்கள் இவைகளுக்கு மேலே போட்டு உபயோகித்துவர குளிர்ச்சியாக விருக்கும் மேற்கூறிய விரணங்கள் ஆறி உலரும்.

### வேறுவித நீலக்காரம்

| | | |
|---|---|---|
| பால்துத்தம் | பலம் | கால் |
| சங்கு | ,, | கால் |
| மயில்துத்தம் | ,, | கால் |

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனுக வெள்ளை துணிசேர்த்து இடித்துப் பொடித்து எரிச்சலுடைய இரணத்தின் மேலே போட்டுக் கொண்டுவர யெறிசிங்கி ரெணமானது ஆறி உலரும்.

### இரணங்களுக்கு மஞ்சட் காரம்

| | | |
|---|---|---|
| மயில்துத்தம் | பலம் | கால் |
| கருங்குவளை | ,, | கால் |
| மஞ்சள் | ,, | கால் |
| சங்கு | ,, | கால் |
| தலைமண்டை ஓடு | ,, | கால் |
| சுண்ணம் | ,, | கால் |
| குங்கிலியம் | ,, | கால் |
| காவிச்சீலை | ,, | கால் |

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனுக துணிசேர்த்து இடித்துப் பொடித்து எறிங்கி பிளவை சிங்கி பவுத்திரம் இவைகளின்மேல் போட்டுக் கொண்டுவர குளிர்ந்து விரணங்கள் ஆறி உலரும்.

### வேறுவித மஞ்சட் காரம்

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | கால் |
| சங்கு | ,, | கால் |
| தலைமண்டை ஓடு | ,, | கால் |
| அரிதாரம் | ,, | கால் |
| பால்துத்தம் | ,, | கால் |
| கருங்குங்கிலியம் | ,, | கால் |

இந்த ஆறு தினுசுகளையும் துணியும் சேர்த்து இடித்துப் பொடித்து வெறிசிங்கி பரங்கி இவ்வித ரணங்களுக்கு மேல் போட்டுக் கொண்டுவர இரணமாறி உலரும்.

### ரத்த சிங்கிற்குக் கருத்த காரம்

| | | |
|---|---|---|
| துணிகந்தை | பலம் | கால் |
| தலைமண்டை ஓடு | ,, | கால் |
| வசம்புசுட்டகரி | ,, | கால் |
| வெள்ளை பாஷாணம் | ,, | கால் |
| மஞ்சள் சுட்டகரி | ,, | கால் |
| சாக்கு | ,, | கால் |
| பால்துத்தம் | ,, | காங் |

இந்த ஏழு தினுசுகளையும் பஞ்சுபோல் இடித்து பவுந்திரம் பிளவை ரத்தசிங்கி மூலம் முளைநோய் இவைகளுக்கு மேலே வைத்துக் கட்ட இரணங்களாறும் முளைவிழும்.

### சுட்டிக்கு வெண்காரம் பொடி

| | | |
|---|---|---|
| சுண்ணம் | பலம் | கால் |
| வீரம் | ,, | கால் |
| வெண்காரம் | ,, | கால் |
| சவுடு | ,, | கால் |
| பால்துத்தம் | ,, | கால் |



| | | |
|---|---|---|
| அரிதாரம் | பலம் | கால் |
| கெவுரி பாஷாணம் | ,, | கால் |
| துணிகந்தை | ,, | கால் |
| மிருதார்சிங்கி | ,, | கால் |
| குங்கிலியம் | ,, | கால் |
| நீலம் | ,, | கால் |

இந்த பதினொரு தினுசுகளை பஞ்சுபோல் இடித்து வைத்துக் கொண்டு குஷ்டம் பதினெட்டுக்கும் திமிர்களுக்கும் பாம்பு கடி எலிகடி நாய்கடி நரிகடி கட்டிகள் சதை வளர்ந்தரணம் பரங்கி இவைகளுக்கு மேல் போட்டு கட்டி கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் இரணமாறி யுலரும்.

### பச்சைக் காரசீலை

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | $\frac{1}{2}$ |
| கெவுரி பாஷாணம் | ,, | $\frac{1}{2}$ |
| அரிதாரம் | ,, | $\frac{1}{2}$ |
| வெள்ளி | ,, | $\frac{1}{2}$ |
| மிருதார்சிங்கி | ,, | $\frac{1}{2}$ |

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனாக நீலம் சேர்த்து கல்வத்திலிட்டு கள் வார்த்து அரைத்து மெல்லிசாகிய சீலையில் ஊட்டி திமிர் தொடை வாழை இவைகளுக்குமேல் போட்டுக் கொண்டுவர சொஸ்தமாகும்.

### சகலவித சிரங்குக்கும் கறுத்த காரசீலை

| | | |
|---|---|---|
| மஞ்சள் சுட்டகரி | பலம் | $\frac{1}{2}$ |
| வசம்பு சுட்டகரி | ,, | $\frac{1}{2}$ |
| எருக்கிலை சுட்டகரி | ,, | $\frac{1}{2}$ |
| மயில்துத்தம் | ,, | $\frac{1}{2}$ |
| பால்துத்தம் | ,, | $\frac{1}{2}$ |

| | | |
|---|---|---|
| கெவுரி பாஷாணம் | பலம் | $\frac{1}{2}$ |
| வெள்ளை பாஷாணம் | ,, | $\frac{1}{2}$ |
| சங்கு | ,, | $\frac{1}{2}$ |

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்தி லிட்டு முலைப்பாலும் கையாந்தகரைச் சாறும்விட்டு மைபோல் அரைத்து வைத்துக்கொண்டு கடிவிஷங்களாலுண்டாகும் இரணம் ஆருத புண் திமிர் தினவு சகலவிதமான சிரங்கு சொறி சிரங்கு இவைகட்குச் சீலைதடவி மேல்போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறி உலரும்.

### மஞ்சட் காரசீலை

| | | |
|---|---|---|
| பாதரசம் | விராகனிடை | $1\frac{1}{4}$ |
| கெவுரி பாஷாணம் | ,, | $1\frac{1}{4}$ |
| வீரம் | ,, | $1\frac{1}{4}$ |
| அரிதாரம் | ,, | $1\frac{1}{4}$ |
| மிருதார்சுங்கி | ,, | $1\frac{1}{4}$ |
| கடுக்காய் | ,, | $1\frac{1}{4}$ |
| கர்க்கட கசிங்கி | ,, | $1\frac{1}{4}$ |

இந்த ஏழுதினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு கோழிமுட்டையைக் கொண்டுவந்து சிகப்பு அம்பிலியைப் போக்கி வெள்ளை அம்பிலிவிட்டு மைபோல் அரைத்து சீலையிலூட்டி இரண முதலான கட்டிகள் மீதுபோட்டுக் கொண்டு வர இரணமாறும்.

### தொணுக்காய் மருவுக்கு சிகப்பு காரசீலை

| | | |
|---|---|---|
| பாதரசம் | பலம் | $\frac{1}{4}$ |
| லிங்கம் | ,, | $\frac{1}{4}$ |
| அரிதாரம் | ,, | $\frac{1}{4}$ |
| கெவுரி பாஷாணம் | ,, | $\frac{1}{4}$ |



| | | |
|---|---|---|
| மிருதார்சிங்கி | பலம் | $\frac{1}{4}$ |
| காவிமண் | ,, | $\frac{1}{4}$ |

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறும் முலைப்பாலும் விட்டு மைபோலரைத்து வைத்துக்கொண்டு நொணுக்காப்புண் ஆருத விரணம் பிளவை தொடைப்புழுவினுலுண்டாகிய பவுந்திரம் ஏழுடன் ஆனைக் கால் ரணம் இவை முதலானதற்கும் சீலையிற்றடவி இரணங்களின் மீதுப் பொட்டுக் கொண்டுவர ஆறி உலரும்.

### வாய்புத்திற்கு வெள்ளைக் காரசீலை

| | | |
|---|---|---|
| சங்கு | பலம் | $\frac{1}{4}$ |
| பாதரசம் | ,, | $\frac{1}{4}$ |
| குங்கிலியம் | ,, | $\frac{1}{4}$ |
| வெள்ளைதுணி | ,, | $\frac{1}{4}$ |
| சவுடு | ,, | $\frac{1}{4}$ |
| சுண்ணும்பு | ,, | $\frac{1}{4}$ |

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு மைபோல் அரைத்து வழித்து வைத்துக் கொண்டு வாய்புத்து பிளவை யிவைகளுக்கு சீலையில் தடவி மேல் போட்டுக் கொண்டுவர இரணமானது ஆறும் வாய்புத்து தீரும். மற்றைய விரணங்களுக்கு முபயோகப்படுத்தலாம்.

### சகலவிரணங்களுக்கும் நீலக் காரசீலை

| | | |
|---|---|---|
| வெந்ததலைமண்டை ஓடு | பலம் | $\frac{1}{2}$ |
| சங்கு | ,, | $\frac{1}{2}$ |
| பால்துத்தம் | ,, | $\frac{1}{2}$ |
| வீரம் | ,, | $\frac{1}{2}$ |
| வெள்ளை பாஷாணம் | ,, | $\frac{1}{2}$ |
| அரிதாரம் | ,, | $\frac{1}{2}$ |

| | | |
|---|---|---|
| சவுட்டுமண் | பலம் | ½ |
| நிலம் | ,, | ½ |

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு அரைத்து பழைய துணியில்தடவி இரணங்களின் மீதுப் போட்டுக் கொண்டுவர இரணங்கள் ஆறும் பாதை தீரும்.

### புரைச்சதை புண்ணுந்திரி

| | | |
|---|---|---|
| மயில்துத்தம் | பலம் | கால் |
| பால்துத்தம் | ,, | கால் |
| பாதரசம் | ,, | கால் |
| அரிதாரம் | ,, | கால் |
| நீலம் | ,, | கால் |
| கெந்தகம் | ,, | கால் |

இந்த ஆறு தினுசுகளையும் பச்சை வெட்டாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு இளநீர் விட்டு மைபோல் அரைத்து சீலையில் ஊட்டி சதையை தின்றுகொண்டு போகும் புரையில் இந்த சீலையை திரிசெய்து புரைக்குள் யேற்றிக் கொண்டுவர சதையைக் கரைத்துப் புரை ரிணத்தைக் கூடிய சீக்கிரத்தில் ஆற்றி உலர்த்திவிடும்.

### மூடுகும் பச்சை தண்ணீர்

| | | |
|---|---|---|
| மிருதார்சிங்கி | பலம் | ½ |
| கர்க்கடக பாஷாணம் | ,, | ½ |
| நிமிளை | ,, | ½ |
| காந்தக்கல் | ,, | ½ |
| அரிதாரம் | ,, | ½ |
| லிங்கம் | ,, | ½ |
| செந்தூரம் | ,, | ½ |
| கெந்தி | ,, | ½ |
| வெள்ளை பாஷாணம் | ,, | ½ |



இந்த ஒன்பது தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு அரைத்து சுன்னமாகப் பொடித்து வைத்துக் கொண்டு இரணங்களின் மீது போட்டுக் கொண்டுவர சகல இரணங்களும் ஆறி உலரும்.

### சிகப்புத் தண்ணீர்

| | | |
|---|---|---|
| லிங்கம் | பலம் | கால் |
| செந்தூரம் | ,, | கால் |
| நீலம் | ,, | கால் |
| குங்கிலியம் | ,, | கால் |
| காவிமண் | ,, | கால் |
| சீலை | ,, | கால் |
| வெள்ளை பாஷாணம் | ,, | கால் |

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் கொடிப்பாலைச் சார்விட்டு மைபோலரைத்து வழித்து பெரியக்குப்பியிலடைக்கிக் கொண்டு பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு சீலையில் தோய்த்து திரிசெய்து புரைரெணங்களுக்கு உள்ளுட்ட ஆருத விரணங்கள் ஆறும் எரிச்சலடங்கும் பவுத்திரம் பிளவை தொடைவாழப் பருவு யிவைகளுக்கும் மேல் போட்டு உபயோகப்படுத்திக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் சொஸ்தமாகும்.

### மூடுகு பச்சை தண்ணீர்

| | | |
|---|---|---|
| மிருதார்சிங்கி | பலம் | கால் |
| மயில்துத்தம் | ,, | கால் |
| பால்துத்தம் | ,, | கால் |
| கெவுரி பாஷாணம் | ,, | கால் |
| பறங்கிப்பட்டை | ,, | கால் |
| அரிதாரம் | ,, | கால் |

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | கால் |
| வெள்ளை பாஷாணம் | ,, | கால் |
| நீலம் | ,, | கால் |

இந்த ஒன்பது தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு இரண்டுபடி முந்திரிநீர்விட்டு அரைத்து குப்பியிலடக்கஞ் செய்துவைத்துக் கொண்டு முளை மூலம் குதி கள்ளான் நுணப்பருவு குஷ்டம் பிளவை பவுத்திரம் இவைகளுக்கு இந்த தண்ணீரை சீலையில் நனைத்து மேலே போட்டுக் கொண்டுவர இரணங்களாறும் முளைகளரும் பாதைதீரும்.

**பிளவை கட்டிக்குக் குங்குமத் தண்ணீர்**

| | | |
|---|---|---|
| சவுட்டுமண் | பலம் | அரை |
| கெவுரி பாஷாணம் | ,, | அரை |
| அரிதாரம் | ,, | அரை |
| மஞ்சள் | ,, | அரை |
| மிருதார்சிங்கி | ,, | அரை |
| வெள்ளை பாஷாணம் | ,, | அரை |
| கர்ப்பூரம் | ,, | அரை |
| குங்கிலியம் | ,, | அரை |

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு முந்திரிநீர் வார்த்து அரைத்து குப்பியிலடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு பிளவை கட்டி இவைகளுக்கு சீலையில் தடவி போட்டுக் கொண்டுவர கட்டியுடை யும் பிளவை யிரணங்களை ஆற்றும்.

**வேறுநீலக் காரத் தண்ணீர்**

| | | |
|---|---|---|
| கரந்தை | விராகனிடை | ஒன்றேகால் |
| கெவுரி பாஷாணம் | ,, | ஒன்றேகால் |
| வெள்ளை பாஷாணம் | ,, | ஒன்றேகால் |



| | | |
|---|---|---|
| சந்தனம் | விராகனிடை | ஒன்றேகால் |
| பரங்கிப்பட்டை | ,, | ஒன்றேகால் |
| சவுட்டுமண் | ,, | ஒன்றேகால் |
| சுண்ணும்பு | ,, | ஒன்றேகால் |
| தீலம் | ,, | 1 |

இந்த ஒன்பது தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு முந்திரி நீர்வார்த்து மைபோலரைத்து குப்பியிலடைத்து வைத்துக் கொண்டு சகல விரணங்களுக்கும் சீலையில் நனைத்து மேலுக்குப் போட்டுக் கொண்டுவர விரணத்தை ஆற்றிவிடும்.

**வேறுவித கடுங்கார வெள்ளைநீர்**

| | | |
|---|---|---|
| சுட்ட தலைமண்டை ஓடு | பலம் | கால் |
| சுண்ணும்பு | ,, | கால் |
| பறங்கிப்பட்டை | ,, | கால் |
| வெள்ளை பாஷாணம் | ,, | கால் |
| நவச்சாரம் | ,, | கால் |
| படிகாரம் | ,, | கால் |
| வெங்காரம் | ,, | கால் |
| சங்கு | ,, | கால் |

இந்த எட்டு தினுசுகளையும் பச்சை வெட்டாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு அதற்குச் சமன் முந்திரிநீர் விட்டு மைபோல் அரைத்து வழித்துக் குப்பியில் அடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு சகல விரணங்களுக்கும் பிளவை முதலானக் கட்டிகளுக்கும் சீலையிலேற்றி மேல்போட்டுக் கொண்டு வர கூடிய சீக்கிரத்தில் ஆறி யுலரும்.

**கிரந்திக்குப் பச்சைநீர்**

| | | |
|---|---|---|
| நீலம் | பலம் | $\frac{3}{4}$ |
| கெவுரி பாஷாணம் | ,, | $\frac{3}{4}$ |

| | | |
|---|---|---|
| அரிதாரம் | பலம் | $\frac{3}{4}$ |
| மஞ்சள் | ,, | $\frac{3}{4}$ |
| குங்கிலியம் | ,, | $\frac{3}{4}$ |
| மயில்துத்தம் | ,, | $\frac{3}{4}$ |

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்தி லிட்டுக் கள்வார்த்து அரைத்து வழித்து குப்பியில் அடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு கிரந்தி முதலாகிய விரணங்களுக்கு இதை சீலையில் நனைத்து விரணங்களின் மீது போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறி யுலரும்.

### எரிரணத்திற்கு குளிர்ந்த நீர்

| | | |
|---|---|---|
| பாதரசம் | பலம் | எட்டிலொன்று |
| சங்கு | ,, | எட்டிலொன்று |
| காவிக்கல் | ,, | எட்டிலொன்று |
| லிங்கம் | ,, | எட்டிலொன்று |
| மயில்துத்தம் | ,, | எட்டிலொன்று |
| பால்துத்தம் | ,, | எட்டிலொன்று |
| கடுக்காய் | ,, | எட்டிலொன்று |

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு கள்வார்த்து மைபோல் அரைத்து குப்பியிலடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு எரிரணங்களின்மீது பூசிக்கொண்டுவர இரணமாறும் குளிர்ச்சியாக விருக்கும்.

### எரிஇரணத்திற்கு குளிர்ந்த நீலநீர்

| | | |
|---|---|---|
| பாதரசம் | விராகனிடை | $1\frac{1}{4}$ |
| கெந்தி | ,, | $1\frac{1}{4}$ |
| தலைமண்டை ஓடு | ,, | $1\frac{1}{4}$ |
| காவிக்கல் | ,, | $1\frac{1}{4}$ |
| லிங்கம் | ,, | $1\frac{1}{4}$ |
| நீலம் | ,, | $1\frac{1}{4}$ |



இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு காலைக் கள்வார்த்து மைபோல் அரைத்து வழித்துக் குப்பியில் அடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு எரிச்சலுள்ள விரணங் களின் மீது போட்டுக் கொண்டுவர குளிர்ச்சியாக விருக்கும் இரணம் ஆறும்.

### வேறுமுறை குளிர்ந்த நீலநீர்

| | | |
|---|---|---|
| சங்கு | பலம் | $\frac{1}{4}$ |
| படிகாரம் | ,, | $\frac{1}{4}$ |
| வெண்காரம் | ,, | $\frac{1}{4}$ |
| பால்துத்தம் | ,, | $\frac{1}{4}$ |
| சாம்பிராணி | ,, | $\frac{1}{4}$ |
| வெந்ததலை மண்டை ஓடு | ,, | $\frac{1}{4}$ |
| வெள்ளை குங்கிலியம் | ,, | $\frac{1}{4}$ |

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு கள்வார்த்து மைபோல் அரைத்து வழித்துக் குப்பியில் அடக் கஞ் செய்து வைத்துக் கொண்டு எரிச்சலுடைய இரணங்களின் மீது போட்டுக் கொண்டுவரக் குளிர்ச்சியாக விருக்கும் சகல மான இரணங்களையும் ஆற்றிவிடும்.

### எரிரணத்திற்கு குளிர்ந்த குங்கும தண்ணீர்

| | | |
|---|---|---|
| கஸ்தூரிமஞ்சள் | பலம் | $\frac{1}{4}$ |
| மிருதார்சிங்கி | ,, | $\frac{1}{4}$ |
| கர்க்கடகக்சிங்கி | ,, | $\frac{1}{4}$ |
| கடுக்காய் | ,, | $\frac{1}{4}$ |
| பால்துத்தம் | ,, | $\frac{1}{4}$ |

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்தி லிட்டுக் கள்வார்த்து மைபோல் அரைத்து வழித்து குப்பியில் அடக்கஞ் செய்து வைத்துக்கொண்டு சீலையில் நனைத்து எரி கின்ற இரணத்தின் மீது போட்டு கொண்டுவர குளிர்ச்சியாக விருக்கும் இரணம் ஆறியுலரும்.

### எரிரணத்திற்கு கறுத்த குளிர்ந்தநீர்

| | | |
|---|---|---|
| மஞ்சள்சுட்டகரி | பலம் | அரை |
| வசம்புசுட்டகரி | ,, | அரை |
| பாதரசம் | ,, | அரை |
| கெந்தகம் | ,, | அரை |
| நீலம் | ,, | அரை |

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு கள்வார்த்து மைபோல் அரைத்து குப்பியிலடைத்து வைத்துக் கொண்டு எரிச்சலுடைய எவ்வித இரணங்களுக்கும் இந்த நீரைச் சீலையில் நனைத்து மேலே போட்டுக் கொண்டுவர குளிர்ச்சியாக விருக்கும் சகல இரணங்களும் ஆறியுலரும்.

### சர்வ இரணங்களுக்கும் சிங்கித்தைலம்

| | | |
|---|---|---|
| மிருதார்சிங்கி | பலம் | அரை |
| கெந்தகம் | ,, | அரை |
| நீலம் | ,, | அரை |
| பாதரசம் | ,, | அரை |
| படிகாரம் | ,, | அரை |
| பறங்கிப்பட்டை | ,, | அரை |
| கடுக்காய் | ,, | அரை |
| பால்துத்தம் | ,, | அரை |
| வசம்பு | ,, | அரை |
| வெங்காயம் | ,, | அரை |

இந்தப் பத்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து பொடித்து ஒரு பாண்டத்திலிட்டு அதில் அரைபடி புங்கம்பாலும் அரை படி ஒதியன்பாலும் அரைபடி தேங்காய் நெய்யும் வார்த்துக் கடுகுபதமாகக் காய்ச்சி இறக்கி வைத்துகொண்டு அறிபிளவை



புரை கிரந்தி பரங்கி தொடைவாழை எரிகின்ற சூலை, ரணம், வெடிரணம், பவுத்திரம், இவைகளுக்கு மேலுக்கு உபயோகப் படுத்த ஆறியுலரும்.

### வேறுவித சிங்கித் தைலம்

| | | |
|---|---|---|
| கஸ்தூரிமஞ்சள் | விராகனிடை | ஒன்றேகால் |
| நிமிளை | ,, | ஒன்றேகால் |
| காந்தக்கல் | ,, | ஒன்றேகால் |
| பாதரசம் | ,, | ஒன்றேகால் |
| அரிதாரம் | ,, | ஒன்றேகால் |
| குங்குலியம் | ,, | ஒன்றேகால் |
| வெள்ளை பாஷாணம் | ,, | ஒன்றேகால் |
| வசம்பு | ,, | ஒன்றேகால் |
| வெங்காயம் | ,, | ஒன்றேகால் |

இந்த ஒன்பது தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்து பொடித்து ஓர் பாண்டத்திலிட்டு புங்கம்பால் படி அரை, ஒதியன்பால் படி அரை, நல்லெண்ணெ படிஒன்று அதில் வார்த்து எண்ணெப்பதத்தில் காய்ச்சி யிறக்கி வைத்துகொண்டு சிங்கி பிளவை இரணம் புத்து அரையாப்பு பவுத்திரம் சூலை இவைகளுக்கு சீலையில் இந்த தைலத்தை தோய்த்து மேலே போட்டுக் கொண்டுவர ஆறியுலரும்.

### வேறுமுறை பங்கான பச்சை தைலம்

| | | |
|---|---|---|
| பாதரசம் | விராகனிடை | ஒன்றேகால் |
| கெந்தகம் | ,, | ஒன்றேகால் |
| அரிதாரம் | ,, | ஒன்றேகால் |
| மயில்துத்தம் | ,, | ஒன்றேகால் |
| பால்துத்தம் | ,, | ஒன்றேகால் |
| குங்கிலியம் | ,, | ஒன்றேகால் |

| | | |
|---|---|---|
| அபினி | விராகனிடை | ஒன்றேகால் |
| காசுக்கட்டி | ,, | ஒன்றேகால் |
| படிகாரம் | ,, | ஒன்றேகால் |
| பங்காளபச்சை | ,, | ஒன்றேகால் |
| வெள்ளை பாஷாணம் | ,, | ஒன்றேகால் |
| வெங்காயம் | ,, | ஒன்றேகால் |
| கஸ்தூரி மஞ்சள் | ,, | ஒன்றேகால் |
| வசம்பு | ,, | ஒன்றேகால் |

இந்த பதிநாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துப் பொடித்து ஒருபாண்டத்திலிட்டு அதில் நல்லெண்ணை தேங்காய்பால் புங்கன்பால் ஒதியன்பால் வகைக்கு படியாக வார்த்து அடுப்பேற்றி தைலபதமாகக் காச்சி வடித்து வைத்துக்கொண்டு புண் புரை இரணம் பவுத்திரம் ஆருத சகல விதமான இரணங்கள் இந்த தைலத்தை சீலையில் நனைத்து மேலே போட்டுக் கொண்டுவர சகலஇரணங்களும் ஆறியுலரும்.

### சகல இரணங்களுக்கும் மேல் பூசும் மருந்து

அரைபலம் பங்காளப் பச்சையை மைனம் போல் பொடி செய்து ஏழரைபலம் நெய்வார்த்து அல்லது வெண்ணெயிலாவது நன்ருயரைத்து நெடுநாளாய் ஆரும லிருக்கும் புண்களுக்கும் மேல் போட்டுக் கொண்டுவர ஆறியுலரும் மேகத்தைச் சார்ந்த கெட்ட தொண்டைப் புண்களுக்கு ஒருயிறகின் நுனியால் தொட்டு தடவிக் கொண்டுவர ஆறியுலரும் மேற்படிப் புண்களுக்கு நெய் அல்லது வெண்ணெயைப் பார்க்கிலும் தேன் நன்று ஒன்றிலுந் தீராத படர்தாமரைக்கு நாளொன்றுக்கு இரண்டுதரம் மேற்படி குழம்பை மேலுக்கு நன்ருய் தேய்க்கில் படர்தாமரை அகன்று வாசியாகும் உள்ளுக்கு உபயோகிக்கக் கூடாது.



### வேறுவித பச்சை தைலம்

| | | |
|---|---|---|
| மரமஞ்சள் | விராகனிடை | ஒன்றேகால் |
| கர்க்கடகசிங்கி | ,, | ஒன்றேகால் |
| வெங்காயம் | ,, | ஒன்றேகால் |
| கடுக்காய் | ,, | ஒன்றேகால் |
| குண்டுமணிவிதை | ,, | ஒன்றேகால் |
| பால்துத்தம் | ,, | ஒன்றேகால் |
| மயில்துத்தம் | ,, | ஒன்றேகால் |
| பாதரசம் | ,, | ஒன்றேகால் |
| மிருதாருசிங்கி | ,, | ஒன்றேகால் |
| நீலம் | ,, | ஒன்றேகால் |
| அரிதாரம் | ,, | ஒன்றேகால் |
| வசம்பு | ,, | ஒன்றேகால் |
| கொறுக்காபுளி | ,, | ஒன்றேகால் |

இந்தப் பதிமூன்று தினுசுகளையும் பச்சை வெட்டாக நிறுத்தெடுத்துப் பொடித்து வைத்துக்கொண்டு ஒருமண் பாண்டத்தில் ஒருபடி நல்லெண்ணெயும் கால்படி முலைப்பாலும் கால்படி குமரிச்சாறும் விட்டு அதில் பொடித்த தூளைப்போட்டு எரித்துக் காச்சி தைலபதத்தில் இறக்கி வடித்து வைத்துக் கொண்டு ஆருதவிரணம் தண்ணீர் வடிகின்ற விரணம் பிளவை புத்து பவுத்திரம் இவைகட்கு சீலையில் நனைத்து மேலுக்குப் போட்டுக் கொண்டுவர சகலவிதமான இரணங்களும் ஆறி யுலரும்.

### புண்கள் புரைகள் மாறத் தைலம்

| | | |
|---|---|---|
| குங்கிலியம் | விராகனிடை | ஒன்றேகால் |
| சாம்பிராணி | ,, | ஒன்றேகால் |
| பாதரசம் | ,, | ஒன்றேகால் |
| கெந்தகம் | ,, | ஒன்றேகால் |

| | | |
|---|---|---|
| மயில்துத்தம் | விராகனிடை | ஒன்றேகால் |
| பால்துத்தம் | ,, | ஒன்றேகால் |
| நீலம் | பலம் | 1 |

இந்த ஏழுதினுசுகளையும் பொடித்து வைத்துக் கொண்டு ஒருமண் பாண்டத்தில்.

| | | |
|---|---|---|
| தும்பைச்சாறு | படி | 1 |
| முருங்கையிலைச்சாறு | ,, | 1 |
| துளசியிலைச்சாறு | ,, | 1 |
| புங்கனிலைச்சாறு | ,, | 1 |
| நுணுயிலைச்சாறு | ,, | 1 |
| கையாந்தகரைச்சாறு | ,, | 1 |
| குமரிச்சாறு | ,, | 1 |
| வில்வயிலைச்சாறு | ,, | 1 |
| நல்லெண்ணெய் | ,, | 1 |
| புங்கம்பால் | ,, | ½ |

இவைகளை விட்டு அதில் பொடித்த தூள்களைப் போட்டு எரித்து தைலபதமாக இறக்கி வடித்து வைத்துக்கொண்டு சூலை புரை பிளவை தாள்புத்து பவுத்திரம் இன்னம் பலவித மான இரணங்களுக்கும் இந்த தைலத்தை சீலையில் துவட்டி மேல் போட்டுக் கொண்டுவர இரணங்கள் ஆறி யுலரும் புரைகள் மாறும்.

## புரைகள் மாறக் குங்குமத் தைலம்

| | | |
|---|---|---|
| மஞ்சள் | விராகனிடை | ஒன்றேகால் |
| வசம்பு | ,, | ஒன்றேகால் |
| அரிதாரம் | ,, | ஒன்றேகால் |
| பாதரசம் | ,, | ஒன்றேகால் |
| பால்துத்தம் | ,, | ஒன்றேகால் |
| படிகாரம் | ,, | ஒன்றேகால் |



| | | |
|---|---|---|
| மிருதார்சிங்கி | விராகனிடை | ஒன்றேகால் |
| கர்க்கடகசிங்கி | ,, | ஒன்றேகால் |
| வெங்காயம் | ,, | ஒன்றேகால் |
| கல்நார் | ,, | ஒன்றேகால் |
| அபினி | ,, | ஒன்றேகால் |

இந்தப் பதினொரு தினுசுகளையும் பச்சை வெட்டாக நிறுத் தெடுத்து பொடித்து வைத்துக்கொண்டு ஒரு மண்பாத்திரத்தில் நல்லெண்ணெய் படிவிட்டு அத்துடன் முலைப்பால் படிவிட்டு பொடித்து வைத்த சரக்குகளை அதில்போட்டு எரித்துக்காய்ச்சி இறக்கி வடித்து வைத்துக் கொண்டு ஆருத இரணங்கள் பிளவை புரை புண் இவைகட்கு இந்த தைலத்தை சீலையில் நனைத்துப் போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறி யுலரும்.

## சகல விரணங்களின் புரை மாற்றும் குமரித் தைலம்

| | | |
|---|---|---|
| நொச்சியிலைச்சாறு | படி | எட்டிலொன்று |
| அழிஞ்சியிலைச்சாறு | ,, | எட்டிலொன்று |
| நுணுயிலைச்சாறு | ,, | எட்டிலொன்று |
| முருங்கையிலைச்சாறு | ,, | எட்டிலொன்று |
| அவுரியிலைச்சாறு | ,, | எட்டிலொன்று |
| சங்கனிலைச்சாறு | ,, | எட்டிலொன்று |
| கையாந்தகரைச்சாறு | ,, | எட்டிலொன்று |
| துளசிச்சாறு | ,, | எட்டிலொன்று |
| தும்பயிலைச்சாறு | ,, | எட்டிலொன்று |
| குப்பமேனிச்சாறு | ,, | எட்டிலொன்று |
| நல்லெண்ணெய் | ,, | 1 |
| குமரிச்சாறு | ,, | 1 |

இந்த சாறு எண்ணெய்களை ஒன்றாய்க் கலந்து ஒரு பாண்டத்தில் விட்டு அதில்.

| | | |
|---|---|---|
| பாதரசம் | விராகனிடை | ஒன்றேகால் |
| கெந்தகம் | ,, | ஒன்றேகால் |
| சித்திரமூலம் | ,, | ஒன்றேகால் |
| வாலுழுவை | ,, | ஒன்றேகால் |
| பால்துத்தம் | ,, | ஒன்றேகால் |

இவைகளைப் பொடித்து சாறுயெண்ணையுடன் சேர்த்து எரித்து தைல பதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு சகல இரணங்களுக்கும் சீலையில் நனைத்து மேல் போட்டுக் கொண்டுவர ஆறியுலரும் புரைகள் மாறும்.

### சர்வ ரணங்களுக்கும் வேறுமுறை தைலம்

| | | |
|---|---|---|
| சங்கனிலைச்சாறு | படி | வீசம் |
| துளசியிலைச்சாறு | ,, | ,, |
| நாயுருவிச்சாறு | ,, | ,, |
| சாரணைச்சாறு | ,, | ,, |
| கொன்றைச்சாறு | ,, | ,, |
| கொடிவேலிச்சாறு | ,, | ,, |
| புங்கன்பால் | ,, | ,, |
| நுணுயிலைச்சாறு | ,, | ,, |
| அவிரியிலைச்சாறு | ,, | ,, |
| கையாந்தகரைச்சாறு | ,, | ,, |
| துத்தியிலைச்சாறு | ,, | ,, |
| தேங்காய்நெய் | ,, | ,, |
| முலைப்பால் | ,, | ,, |

இந்தச்சாறு தேங்காய் நெய் முலைப்பால் இவைகளை ஒரு மண்பாண்டத்தில் வார்த்து அதில்.

| | | |
|---|---|---|
| மயில்துத்தம் | பலம் | எட்டிலொன்று |
| கெந்தி | ,, | எட்டிலொன்று |
| பால்துத்தம் | ,, | எட்டிலொன்று |



| | | |
|---|---|---|
| பாதரசம் | பலம் | எட்டிலொன்று |
| அரிதாரம் | ,, | எட்டிலொன்று |
| மரமஞ்சள் | ,, | எட்டிலொன்று |

இந்த ஆறு தினுசுகளையும் பொடித்துப் போட்டு எரித்துக் காய்ச்சி தைலபதமாக இறக்கி வடித்து வைத்துக் கொண்டு ஆருத இரணம் பிளவை சிங்கி தொடைவாழை பவுத்திரம் இவைகள் முதலானதற்கும் இந்த தைலத்தை சீலையில் தோய்த்து இரணங்களின் மீது போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் இரணங்கள் ஆறியுலரும் புரைகளானது மாறும்.

### சர்வ ரணங்களுக்கும் மேற்பூசும் மருந்து

| | | |
|---|---|---|
| முருங்கையிலைச்சாறு | படி | வீசம் |
| மின்னையிலைச்சாறு | ,, | ,, |
| தும்பையிலைச்சாறு | ,, | ,, |
| அவிரியிலைச்சாறு | ,, | ,, |
| அத்திப்பால் | ,, | ,, |
| வேப்பின்சாறு | ,, | ,, |
| செருப்படைச்சாறு | ,, | ,, |
| பேயத்திச்சாறு | ,, | ,, |
| கொடிவேலிச்சாறு | ,, | ,, |
| கருநொச்சிலைச்சாறு | ,, | ,, |
| கையாந்தகரைச்சாறு | ,, | ,, |

இவைகளைக் கலந்து எவ்வித இரணங்களுக்கும் மேல் பூசிக் கொண்டுவர ஆறியுலரும்.

### சர்வ வீக்கத்திற்கும் பற்று

| | | |
|---|---|---|
| அபின் | காசியிடை | $\frac{1}{2}$ |
| கடுகு | பலம் | $\frac{1}{2}$ |
| பெருங்காயம் | ,, | $\frac{1}{2}$ |

| | | |
|---|---|---|
| நேர்வாளம் | பலம் | அரை |
| கம்பவளம் | ,, | அரை |

இந்த ஐந்து தினுசுகளேயும் நிறுத்தெடுத்துக் கல்வத்தி லிட்டு எருக்கன் சாறுவிட்டு மைபோல் அரைத்து வீக்கத்தின் மீது பூசிக்கொண்டுவர பிளவை கட்டி சூலே பவுத்திரம் இவை களின் வீக்கம் வாங்கி நோய் தீரும்.

### அரையாப்புக் கட்டிக்கு வேறுமுறை பற்று

| | | |
|---|---|---|
| பவழம் | பலம் | அரை |
| கருஞ்சீரகம் | ,, | அரை |
| அபினி | ,, | அரை |
| பெருங்காயம் | ,, | அரை |
| நாபி | ,, | அரை |
| வெள்ளேப்பூண்டு | ,, | அரை |
| சித்திரைமூலம் | ,, | அரை |

இந்த ஏழு தினுசுகளேயும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு கள்ளிச்சாறு விடுத்து மைனம்போல் அரைத்து அரையாப்பு பிளவை பவுத்திரம் இன்னும் பலவிதமான வீக்கங்களுக்கும் கட்டிகளுக்கும் மேலே பூசிக் கொண்டுவர வீக்கமானது வாடும் கட்டியானது கரைந்துபோகும்.

### சர்வ வீக்கத்திற்கும் கொடும் பற்று

| | | |
|---|---|---|
| பாதரசம் | பலம் | கால் |
| கெந்தகம் | ,, | கால் |
| வெங்காயம் | ,, | கால் |
| நேர்வாளம் | ,, | கால் |
| பெருங்காயம் | ,, | கால் |

இந்த ஐந்து தினுசுகளேயும் கல்வத்திலிட்டு திருகுகள்ளிச் சாறு விட்டு மைபோல் அரைத்து கட்டிகள் சூலேவாதக் கட்டி



கள் மேல்வீக்கம் பிளவை பவுத்திரம் இவைகட்கு மேல் பூசிக் கொண்டுவர வீக்கங்கள் வாடும் கட்டிகள் கரையும்.

### வேறுமுறை வீக்கங்களுக்குப் பற்று

| | | |
|---|---|---|
| பாதரசம் | பலம் | கால் |
| கெந்தகம் | ,, | கால் |
| பெருங்காயம் | ,, | கால் |
| நேர்வாளம் | ,, | கால் |
| கரும்பவளம் | ,, | கால் |
| அபினி | ,, | கால் |
| கருஞ்சீரகம் | ,, | கால் |

இவைகளே நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு பொற்றலேக் கரிப்பான் சார்விட்டு மைபோல் அரைத்து கட்டிகள் சூலே பிளவை வீக்கம் இவைகட்கு மேல் பூசிக்கொண்டுவர வீக்கங் கள் வாடும் கட்டிகள் கரையும் பிளவை சூலேகள் தீரும்.

### அரையாப்புக் கட்டிக்கு வேறுமுறை பற்று

| | | |
|---|---|---|
| லிங்கம் | பலம் | கால் |
| அரிதாரம் | ,, | கால் |
| குங்கிலியம் | ,, | கால் |
| கரும்பவளம் | ,, | கால் |
| அபினி | காசியிடை | 1 |
| பெருங்காயம் | பலம் | கால் |

இவைகளே நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு திருகுகள்ளிச் சார் விட்டு மைனம்போல் அரைத்து பிளவை பவுத்திரம் கட்டி கள் அரையாப்பு சூலே பதினெட்டுக்கும் இதை மேல் பூசிக் கொண்டுவர கட்டிகள் கரையும் வீக்கங்கள் வாடும்,

### சகல விதமான கட்டிகளுக்கும் மேல்பூசும் பற்று

| | | |
|---|---|---|
| கடுக்காய் | பலம் | கால் |
| சுக்கு | ,, | கால் |
| கரும்பவளம் | ,, | கால் |
| நாபி | ,, | கால் |
| பெருங்காயம் | ,, | கால் |
| அபினி | காசியிடை | கால் |
| சித்திரைமூலம் | ,, | கால் |
| நேர்வளப்பருப்பு | ,, | கால் |
| எருக்கன்வேர் | ,, | கால் |

இவைகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு எருக்கன் பால் வார்த்து மைபோல் அரைத்து சர்வ கட்டிகளுக்கும் மேல் பற்றுப் போடக் கட்டிகரையும் அல்லது உடைந்து உபாதை தீரும்.

### சகலவித கட்டிகட்கு மேல்பூசும் வேறுமுறைப் பற்று

| | | |
|---|---|---|
| ஊமத்தங்காய் | பலம் | கால் |
| சித்திரமூலம்வேர் | ,, | கால் |
| அழிஞ்சில் | ,, | கால் |
| மகிழம்பருப்பு | ,, | கால் |
| அபினி | காசியிடை | 1 |
| கஞ்சா | ,, | கால் |

இவைகளை நிறுத்தெடுத்து எருக்கன் பால் வார்த்து அரைத்து கட்டிகள்மீது பற்றுகப் போட்டுக் கொண்டுவர கட்டி கரையும் அல்லது உடைந்து உபாதை தீரும்.

### சர்வ விஷ வீக்கங்களுக்கும் மேல்பூசும் பற்று

கல் சுண்ணும்பு முருங்கைப்பட்டை வெங்காயம் வசம்பு பேய்பீர்க்கெலே இவைகளை ஓர் நிறையாக நிறுத்தெடுத்து



எருக்கன்பால் விட்டு மைபோல் அரைத்து அரியாப்பு கட்டி முதல் பலவிதமான கட்டிகட்கும் மேல் பற்றுகப்போட கட்டிகள் கரைந்து அல்லது பழுத்து உடைந்து பாதைகள் தீரும்.

### இரணங்களுக்குப் பிளாஸ்திரி

ஒருபலம் குங்கிலியத்தை வெண்ணெயில் கலந்து கடைய வெண்ணெயானது திரளும் அதை வழித்து டப்பியில் அடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு இரணங்களுக்கு சீலேயிற்றடவிப் போட்டுக் கொண்டுவர ரத்தம் சீழ் போகும் எரிச்சல் புடைச்சல் தீரும் நரம்பு வலியுடன் இசுவானதும் போகும் இரணம் ஆறியுலரும்.

### சர்வரெணங்களுக்கும் முலாம்

| | | |
|---|---|---|
| லிங்கம் | பலம் | கால் |
| பால்துத்தம் | ,, | கால் |
| சிங்கி | ,, | கால் |
| கெந்தி | ,, | கால் |
| குங்கிலியம் | ,, | கால் |
| ரசகர்ப்பூரம் | ,, | கால் |
| கடுக்காய் | ,, | கால் |
| மாசிக்காய் | ,, | கால் |

இவைகளைநிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு பசும்வெண்ணெ போட்டு மூன்றுநாள் வரைக்கும் அரைத்து பனிநீர் விட்டு அரைத்து வழித்து முலாமை டப்பியில் அடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு புண் புரை முதலான விரணங்களுக்கு இந்த முலாமைப் போட்டுக் கொண்டுவர சகல ரிணங்களும் ஆறி யுலரும்.

### சர்வ ரணங்களுக்கும் வேறுமுறை முலாம்

| | | |
|---|---|---|
| மாசிக்காய் | பலம் | அரை |
| கடுக்காய் | ,, | அரை |
| பால்துத்தம் | ,, | அரை |
| லிங்கம் | ,, | அரை |
| கெந்தி | ,, | அரை |
| சிங்கி | ,, | அரை |
| பூரம் | ,, | அரை |
| குங்கிலியம் | ,, | அரை |

இவைகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு பசுவின் வெண்ணை விட்டு மூன்றுநாள் வரைக்கும் அரைத்து பனிநீர் விட்டு ஆட்டிக்கழுவி குற்றம் போக்கி முலாந் திரண்டுவரும் போது முலாணை வழித்து டப்பியில் அடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு சகல ரணங்களுக்கும் இந்த முலாணைப் போட்டுக் கொண்டுவர ஆறியுலரும்.

### தடிப்பு முதலிய அரையாப்புகள் கரைவதற்கு கட்டு

| | | |
|---|---|---|
| காசிக்கட்டி | பலம் | கால் |
| செங்கொட்டை | ,, | கால் |
| காடிகாரம் | ,, | கால் |
| கொடிவேலி | ,, | கால் |
| பனவெல்லம் | ,, | கால் |

இந்த ஐந்துதினுசுகளையும் நிறுத்தெடுத்து அரைத்து அரையாப்புகட்டியின் மீதுவைத்து மூன்றுநாள் கட்டிக் கொண்டுவர கட்டியானது கரையும் அல்லது உடையும்.

### அரையாப்பு இரணத்திற்கு சீலை

| | | |
|---|---|---|
| குங்கிலியம் | பலம் | 1 |



நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு பசும்வெண்ணெய் சேர்த்து மைனம்போல் அரைத்து வைத்துக் கொண்டு சீலையில் தடவி அரையாப்பு முதலிய விரணங்களின்மீது போட்டுக் கொண்டுவர ஆறியுலரும்.

### கொருக்கு முதலிய புண்களுக்கு மேற்பூசும் முலாம்

| | | |
|---|---|---|
| மிருதாருசிங்கி | விராகனிடை | ஒன்றேகால் |
| கெந்தி | ,, | ஒன்றேகால் |
| பூரம் | ,, | ஒன்றேகால் |
| குங்கிலியம் | ,, | ஒன்றேகால் |
| பால்துத்தம் | ,, | ஒன்றேகால் |

இந்த ஐந்து தினிசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்தி விட்டு தேங்காநெய்விட்டு மைனம்போல் அரைத்து அதில் முறையே ஏழுதரம் ஜலம்விட்டு அரைத்துக்கழுவி வழித்தெடுத்து வைத்துக் கொண்டு அரையாப்பு கொருக்கு முதலிய விரணங்களுக்கு மேல்பூச ஆறியுலரும்.

### சர்வ பருவுகளுக்கும் பத்து

கலிவிருத்தம்

தண்டுநற்கருங்கல் வரைத்தேயதில்
அண்டுநல்வெல்லம் அவ்விடைதூக்கியே
ரெண்டுங்கூட்டி ரிணமதில்பத்திடில்
பண்டுமீரும் பருவுடைந்தோடுமே.

### இதுவுமது

ஓடுமெஞ்சிமுவுளன் முளையற்றபின்
காடுமேமுருங்கை யிலைச்சாறுபிழிந்
தோடுமெல்லிய சீலையிலூட்டியே
போடுமருந்து பொழிந்திட ச்சாடுமே.

### வெட்டு புண்களுக்கு கட்டு மருந்து

சாடுங் கோடைக சாலை யிலை பரி
தேடும் வேண்டியே தேயிரு நேரமும்
மாடுங்கையினுல் தாக்கி யீரைந்து நாள்
போடுமேல் வெட்டு புண்ணுறிக் கண்டதே.

### சர்வ ரணங்களுக்கும் அக்னி பிளாஸ்திரி

பொய்யாது மாந்தர்க்கு புகலுவேன் வாகடம்
அய்யா பிளாஸ்திரி அரையுவேன் வகையுடன்
மெய்யா வீர மிராக னிருபது
தொய்யா விளக்கெண்ணை துவள வரைத்திடே.

அரைத்துச் சல்லாவி லழிந்தடப் பூசியே
விரைத்த கிரந்திபுண் விரும் ரணத்திற்கு
உரைத்தப் படியாக வுரிதியான் பூட்டிடில்
கரைத்த ரணங்களுங் காணுமலோடுமே.

### சர்வ ரணத்திற்கும் உட்கொள்ளவும் மேற்பூசவும் பவுத்திரத்திற்கும் பற்றிடவும் மருந்து

வெளுத்த வெண்ணையும் வெண்ணுச்சிப் புங்குடன்
வளுத்த பூவும் வரிந்தி வகை யொன்று
இனித்தசார் படி யெள்ளெண்ணெய் தான் படி
பளிக்கை துத்தமும் பாங்குடன் கேந்தியே.

ஆண சூதம் வெட்பாலையும் பரங்கியும்
மாண செந்தூர மானவ லிங்கமும்
காண வேக மடக்கடி தீபத்தில்
பாண மாயெடுத் திருனேற மருந்திடே.

வருந்தி சூலை வரும் வெடிப் போக்கிடும்
புருந்து தொண்டையும் பொற சதை சிங்கியும்
மறிகிரந்தியு மாருதப் புண்களும்
பறி பரங்கியும் பகர்குஷ்டமேகுமே.



### சர்வ இரணங்களுக்கு மூட்கொள்ளும் யெண்ணெய்

| | | |
|---|---|---|
| சதுரக்கள்ளிவேர் | பலம் | $\frac{1}{2}$ |
| எருக்கன்வேர் | ,, | $\frac{1}{2}$ |
| கொடிக்கள்ளிவேர் | ,, | $\frac{1}{2}$ |
| சித்திரமூலம்வேர் | ,, | $\frac{1}{2}$ |
| அமுக்குராம்வேர் | ,, | $\frac{1}{2}$ |
| சூதம் | ,, | $\frac{1}{2}$ |
| கெந்தி | ,, | $\frac{1}{2}$ |
| செந்தூரம் | ,, | $\frac{1}{2}$ |

இந்த ஒன்பது தினுசுகளையும் நிறுத்தெடுத்து பொடித்து ஒரு படி சித்தாமணக்கெண்ணையில் போட்டு அடுப்பேற்றி யெரித்துக்காச்சி பதத்திலிறக்கி வடித்து வைத்துக்கொண்டு காலையில் ஒரு சிறுகரண்டி வீதம் 3-நாள் உட்கொள்ள சகல ரணங்களும் ஆறியுலரும். இச்சாபத்தியமாகக் கொள்ளவும்.

### அரையாப்பு முதலான இரணங்களுக்கு களிம்பு

| | | |
|---|---|---|
| லிங்கம் | பலம் | $\frac{1}{4}$ |
| மிருதார்சிங்கி | ,, | $\frac{1}{4}$ |
| ரசகர்ப்பூரம் | ,, | $\frac{1}{4}$ |
| வெள்ளைகுங்கிலியம் | ,, | $\frac{1}{4}$ |
| கடுக்காய் | ,, | $\frac{1}{4}$ |
| மாசிக்காய் | ,, | $\frac{1}{4}$ |
| காசுக்கட்டி | ,, | $\frac{1}{4}$ |
| தான்றிக்காய் | ,, | $\frac{1}{4}$ |

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு பொடித்து பசும்வெண்ணை சேர்த்து மைபோல் அரைத்து வழித்து தண்ணீரில் ஒருநாள் மெதக்கப் போட்டு மறுநாள் எடுத்து இரணங்களின்மீது போட்டுக் கொண்டுவரக் கூடிய சீக்கிரத்தில் ஆறியுலரும்.

### நெடுநாள்பட்ட விரணம் ஆறமருந்து

நெடுநாள்பட்ட இரணங்களின்மீது விளிம்பைச் சுற்றிலும் மெதுவாய் துரிசை பூசிக்கொண்டு வந்தால் கூடிய சீக்கிரத்தில் ஆறியுலரும்.

### இதுவுமது வேறுமுறை

மூன்று * கிறேயின் துரிசை ஒரு அவுன்சு தண்ணீரில் கலக்கி தினம் இரண்டுதரம் புண்களில் விட்டுப் பின்பு மூன்று அல்லது நாலுநாளைக்கொருதரம் துரிசின்யிடையை ஒவ்வொரு கிறேயின் வீதம் வியாதிக்காரனின் உணர்வுபோல் அதிக நோவும் சூடும் இல்லாமல் சிற்றெரிவும் உஷ்ணமும் மாத்திரம் கொடுக்கும்படியாய் 1 அவுன்சு தண்ணீரில் 10 கிறேயினுகு மட்டும் அதிகரிப்பித்துக் கொள்ளவேண்டும். அதில் அதிகயெரிவுண்டானுல் துரிசின் காரம் குறையும்படி சற்றதிகமாய்ச் சலத்தைக் கூட்டிக் கொள்ளவேண்டும். மேற்படி சலத்தைக் காலமேயும் சாயந்திரமும் புண்களில்விட்டு இடைவேளைகளில் அரிசிப்போல்டீசைக் கட்டவேண்டும் துன்மாமிசத்திற்கு அதின் மேல் துரிசை மூன்று அல்லது நாலுதினத்திற்கு ஒருதரம் தடவவேண்டும். பிராயமானவர்களுக்காவது வாயினுள் வரும் புண்களுக்கு 5 கிறேயின் துரிசை நேர்மையாய் தூள்செய்து அரை அவுன்சு தேனில் கலந்து விரலால் தொட்டு யிடவேண்டும். பிள்ளைகளுக்கும் பாலர்களுக்கும் காணும் கண்ணோய்களுக்கு ஒருகிறேயின் துரிசை ஒரு அவுன்சு சலத்தில் கலக்கி தினம் மூன்று அல்லது நாலுதரம் கண்ணைக் கழுவினுல் குணமாகும் கடினமான கண்ணோய்களுக்கு ஒரு அவுன்சு தண்ணீரில் இரண்டு கிறெயின் துரிசைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

---

* கிரெயின் எடை என்பது உளுந்தெடை



### படர் தாமரைக்கும் தலைசொரிக்குப் மருந்து

| | | |
|---|---|---|
| துரிசின்தூள் | கிறேயின் | 20 |
| மாசிக்காய் தூள் | அவுன்சு | 1 |
| மெழுகு பிளாஸ்திரி | ,, | 1 |

இந்த மூன்று தினுசையும் ஒன்ருய்ச் சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு சொரியுள்ள தலையில் நன்ருய்த் தேய்த்து வர சொரியானது மாறும். படர்தாமரைக்கும் இவ்விதமே தேய்க்கவேண்டும். சொறி சிரங்குக்கு ஒரு அவுன்சு துரிசை அரைப்புட்டி தண்ணீரில் கலக்கி பூசவேண்டும் நமச்சலடங்கும் சொரியானது மாறும்.

### அட்டை கடிக்கு மருந்து

அட்டையானது கடித்தவாயில் நின்று இரத்தம் போகிறதற்கு கொஞ்சம் துரிசை தூள்செய்து கடிவாயில் வைக்க நிக்கும்.

### மூக்கில் வரும் இரத்தம் நிற்க

மூக்கினிடமாக நின்று மிகுதியாய் இரத்தம் போகிறதற்கு 4 கிறேயின் துரிசை ஒரு அவுன்சு தண்ணீரில் கலக்கி மூக்கினுள் விடவேண்டும், ஆனுல் இதுப்படிகாரத்திற்கு தாழ்ச்சியாய் யிருக்குமென வறிக.

### பக்கப்பிளவைக்கும் தசையழுகிய புண்களுக்கும் மருந்து

பக்கப் பிளவைகளுக்கும் தசையழுகியப் புண்களுக்கும் அசற்றுள்ள புண்களுக்கும் வியாதிக்காரனின் மனம்போல குளிர்ந்த சலமாவது வெந்நீராவது இரண்டு மூன்று சட்டிகள் நிறைய எடுத்து வைத்துக் கொண்டு அதை ஒரு செம்பிலாவது கெண்டியிலாவது எடுத்துப் புண்ணின்மேல் தொடர்ந்த தாரையாய் விடவேண்டும். இப்படி தினந்தோறும் இரண்டுதரஞ்

செய்யவேண்டும், இதினல் மிகுந்த அசடு யெடுக்கப்படுகிறது மன்றி சிவ நாளானவுடன் புண்சவுக்கியப்பட ஆரம்பிக்கும் புண் காலிலாவது கையிலாவது யிருக்குமாகில் நோயாளி தான் தானே சலத்தை விட்டுக்கொள்ளலாம் முதுகிலாவது கழுத்தி லாவது உண்டாயிருக்கில் வேறே ஒரு மனிதனைக் கொண்டு செய்விக்கவேண்டும். சலத்தைப் புண்ணின்மேல் ஒன்றி ரண்டுஅடி உயரத்தில் நின்று விடவேண்டும் அசடு முற்றும் நீங்கி புண் சிவப்பாயும் சவுக்கியமாகிற இலட்சண முடையதா யும் காணும்பொழுது சலத்தை நிறுத்தி புண்களில் மெழுகு பிளாஸ்திரியை பிடவேண்டும் சலம்விடுகிறது குறைந்தாலும் ஒருமணிநேரம் வரையும் விடவேண்டும் இடநேரங்களில் கள் சேர்ந்த போல்டீசை வைத்துக்கட்டவேண்டு மெனவறிக.

### மூத்திரம் அடைப்பு நிவாரணமாக

மூத்திரம் போகாமல் தடைப்பட்டிருக்கின்றதற்கு சீலையை சுடு தண்ணீரில் தோய்த்து வியாதிகாரன் சகிக்கத்தக்கதான சூடுடனே வயிற்றின்மேலும் அடிவயிற்றின் மேலும் இட்டுஆறிப் போகிற பொழுதெல்லாம் வேறே ஒரு சீலையை சுடுதண்ணீரில் தோய்த்து இப்படி அடிக்கடி மாறிமாறி இடவேண்டும்.

### வேறுவித பிரயோகம்

மூத்திரம் போகாமல் தடைப்பட்டிருக்கின்றவர்களுக்கு ஒரு தொட்டியிலாவது பரந்திருக்கப்பட்ட பருஞ்சட்டியிலாவது கிடைக்கு மாகில் அதில் சுடத்தண்ணீரைவிட்டு நோயாளியைப் பார்த்து அல்லது இருபது மின்னிட்டுநேரம் சலத்தில் உட்கார வைத்திருக்க வேண்டும் இப்படி செய்தால் மூத்திரமானது உட னே போகும் பாதை தீரும்.

### தொண்டைப் புண் நிவாரணமாக

சகலமான தொண்டைப் புண்களுக்கு சுடுதண்ணீரில் ஆவியை உள்ளுக்குச் சுவாசம் வாங்கினல் அதிக குணம்



உண்டாகும் ஆனல் சளித்தன்மையுள்ள வெண்டைக்காய்களில் 12 அல்லது அதிலதிகம் எடுத்துத் துண்டுகள்செய்து சலத்தில் வேகவைத்து அந்த சலத்தின் ஆவியைச் சுவாசம் வாங்கினல் பலன் அதிகரிக்கும் மேற்படி சலத்தை வாய் சுருங்கின பாத் திரத்தில் விட்டு அதினுவிதொண்டையிலுள் நன்ருய்ச் செல்லும் படி வாயை பாத்திரத்தின் வாயின்மேல் அடுத்து வைத்துச் செய்யில் தொண்டைப்புண் ஆறும்-

### சர்வ படைகளுக்கு மேற்பூசும் மாத்திரை

| | | |
|---|---|---|
| கெந்தகம் | பலம் | ½ |
| ரசம் | ,, | ¼ |
| குங்கிலியம் | ,, | 3 |
| மிருதாருசிங்கு | ,, | ¼ |

இவைகளுடன் சீமை அகத்தி பொன்னகத்தியிலைப் போதுமான வரைக்குஞ் சேர்த்து மேற்படி மருந்துகளை கல்வத் திலிட்டு மைபோல் அரைத்து சுண்டக்காய்ப் பிரமாணம் மாத் திரைகள் செய்து உலர்த்தி வைத்துக்கொண்டு தாமரைப்படை யெச்சைப்படை, கடுவன், அரைக்கடுவன் குழந்தைக்கணுக் கால் கடுவன் மங்கு மூக்கின்மேல் வரும் புண்களுக்கு இந்த மாத்திரையை வெள்ளாட்டுப்பால் அல்லது எலுமிச்சம் பழஞ் சார் இவைகளை விட்டு உரைத்து மேல் போட்டுக் கொண்டுவர குணமாகும்.

### நெடுநாள் பட்ட நாற்றமுள்ள படர்புண்களுக்கு சேர்வைசீலை

நுண்மையாய்த் தூள்செய்த படிகாரம் 8 திராம் காசுக் கட்டி 2 திராம் அபின் ஒருதிராம் மெழுகுபிளாஸ்திரி 2 அவுன்சு இவையில் அபினி முன்னக பிளாஸ்திரியுடன் நன்ருய்க் கலந் துக் கொண்டு பின்பு மற்ற மருந்துகளை யெல்லாம் கூட்டி

அரைத்து இதை ஒரு துண்டுச் சீலையில் தடவி காலையிலும் சாயந்திரமும் புண்ணிலிடவேண்டும் வேதனையை யுண்டாக்கு மாகில் மேற்படி சேர்வையின் காரத்தைக் குறைக்கும்படியாய் மெழுகு பிளாஸ்திரியை அதிகரித்துக் கூட்டிக் கொள்ள வேண்டும் இரணங்களில் அதிகமாய் வளரும் துர்மாமிசங் களுக்குப் பொரித்த படிகாரத்தூளில் கொஞ்சந்தூவினுல் சதை கரையும்.

### மூட்டு வீக்கங்களுக்கு சீலை

மூட்டு வீக்கங்களுக்கும் அடிசதைகளுக்கு இவையின் காரணத்தால் உண்டாகிற வீக்கங்களுக்கும் அரை புட்டிக் காடியும் அவ்வளவு சாராயமும் ஒன்ருய்க் கலந்து 4 திராம் படிகாரத்தைக் கரைத்து அதில் சீலையை நனைத்து மேற்படி வீக்கங்களின் மேல் போட்டுக் கொண்டுவர குணமாகும்.

### சர்வ ரணங்களுக்கும் உட்கொள்ளும் யெண்ணெய்

| | | |
|---|---|---|
| கொடிக்கள்ளிவேர் | பலம் | ½ |
| சித்திரமூலம்வேர் | ,, | ½ |
| எருக்கன்வேர் | ,, | ½ |
| அமுக்கனுங்கிழக்கு | ,, | ½ |
| பாதரசம் | குண்டுமணியிடை | 20 |
| ரசசெந்தூரம் | ,, | 20 |
| கெந்தகம் | ,, | 20 |

இவைகளை நிறுத்தெடுத்து வேறுவகை யாவும் இடித்து சூரணித்து மற்ற சரக்குகள் யாவும் கல்வத்திலிட்டு விளக் கெண்ணெய் வார்த்து இரண்டு ஜாமம் அரைத்து ஒருமண் பாண் டத்தில் அரைபடி விளக்கெண்ணை வார்த்து வீசம்படி கொடிக் கள்ளிச்சார்விட்டு மருந்தை அதில் போட்டுக் கலக்கி கள்ளிச் சார் வீசம்படி விட்டு அடுப்பேற்றி யெரித்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு காலையில் உச்சிக்கரண்டி



வீதம் 5 நாள் அல்லது 7 நாள் சாப்பிடவும் சகல விரணங்களு மாறும் இச்சாபத்தியம் அரை காரம் சேர்க்கவும் சுட்ட புளி வறுத்த உப்புச் சேர்ப்பதே மிகவும் உத்தமமெனப்படும்.

### பக்கசூலை கெர்ப்பசூலைக்கு உட்கொள்ளும் யெண்ணை

முளகரணை யிலையை உரலிலிட்டு ஜலம் வார்த்து இடித்து 6 பலம் ரசம் பிழிந்துகொண்டு அதில் 6 பலம் சித்தாமணக் கெண்ணை விட்டு உரித்தெடுத்த பூண்டு திருகு 2 பலம் சேர்த்து அடுப்பேற்றி யெரித்துக் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு திரேக திடப்படி 3 நாளைக்குக் காலையில் உச்சிக்கரண்டி வீதங் கொடுத்துவர பேதியாகும் பேதியதிகமானுல் நோய் நீங்கின தென்று தெரிந்து கொண்டு யெண்ணெய் நிறுத்திவிடவும் இச்சாபத்தியம்.

### கை கால் பிடிப்புக்கு உட்கொள்ளும் யெண்ணை

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த வாளம் | விராகனிடை | 2 |
| ஏலம் | ,, | 1 |
| சுக்கு | ,, | 1 |
| பூரம் | ,, | 1 |

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்தி விட்டு விளக்கெண்ணெய் வார்த்து அரைத்து ஒரு பாண்டத்தில் அரை பலம் புங்கம்பாலும் அஞ்சி பலம் விளக்கெண்ணெயும் விட்டு அரைத்த மேல்படி மருந்தை யெண்ணையில் கலக்கி மூன்றுநாள் சூரிய புடம் வைத்து யெடுத்து வைத்துக்கொண்டு காலையில் உச்சிக்கரண்டி வீதம் 5-நாள் அல்லது 7-நாள் சாப் பிடவும், கைகால் பிடிப்பு தீரும் சுட்ட புளி வறுத்த உப்பு கூட்டவும்.

### அச்சரத்திற்கு யெண்ணை

| | | |
|---|---|---|
| புளிகருணைக்கிழங்கு | பலம் | ½ |
| வசம்பு | ,, | ½ |

| | | |
|---|---|---|
| வெள்ளெருகு | பலம் | ½ |
| வெங்காயம் | ,, | ½ |
| நஞ்சறுப்பான்வேறு | ,, | ½ |
| நிலப்பனங்கிழங்கு | ,, | ½ |
| பெருங்கிழங்கு | ,, | ½ |
| தும்பமராஷ்டகம் | ,, | ½ |
| கருஞ்சீரகம் | ,, | ½ |
| கடுகுரோகிணி | ,, | ½ |
| காட்டுக்கருணைக்கிழங்கு | ,, | ½ |
| ஆத்துதுமட்டிக்காய் | ,, | ½ |
| சவுரிக்கிழங்கு | ,, | ½ |

இந்த பதிமூன்று தினுசுகளையும் பஞ்சுபோலிடித்து அரை படி விளக்கெண்ணெயில் போட்டு அடுப்பேற்றி காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு காலையில் உச்சிக்கரண்டி வீதம் சாப்பிடவும் 4, 5, விசை பேதியாகும். அதிகமாய் பேதியானால் ஓமங்கொண்டு வந்து வென்னீரில் அரைத்து பால்பிழிந்து ஒரு பாலாடை அல்லது இரண்டு பாலாடை சாப்பிட பேதிநிற்கும், ஆனால் யெண்ணெய் 3-நாள் கொடுக்கவும் பத்தியம் சுட்ட புளி வறுத்த உப்பு சேர்க்கவும் சிறுபிள்ளையானால் தாய் பத்திய மிருக்க வேண்டும்.

## கொருக்கு வெள்ளைக்கு யெண்ணெய்

| | | |
|---|---|---|
| பூரம் | விராகனிடை | ½ |
| ஓமம் | ,, | ½ |
| ஏலம் | ,, | ½ |
| லவுங்கம் | ,, | ½ |

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு செம்பருத்திச் சார்விட்டு மைனம்போல் 4-ஜாமம் அரைத்து 2½-பலம் வெளக்கெண்ணெயில் கலக்கி ஒருநாள் சூரியபுடம்



வைத்து மறுநாள் முதல் காலையில் உச்சிக்கரண்டிவீதம் 5-நாள் அல்லது 7-நாள் சாப்பிடவும் கொருக்குவெள்ளை முதலான நோய்தீரும். இச்சாபத்தியம் மருபத்தியமும் அவ்வாறே யிருக்க வேண்டும்.

## அயத்தெண்ணெய்

அயம் பலம் 1 எலுமிச்சம்பழம் 15 அறுத்து உப்பு வைப்பதுபோல் அயத்தையுள்ளே வைத்து ஒருவீசை சாம்பிராணி பூண்டென்கிற பிரமிவழுக்கையைச் சுத்தஞ்செய்து பேர்பாதியாக்கி ஒரு பெரிய பாண்டத்தில்போட்டு 4½-படி ஜலம் விட்டு மேற்படி பழத்தை வைத்து அதில்.

| | | |
|---|---|---|
| வெள்ளைவெங்காயம் | பலம் | 4 |
| சுக்கு | ,, | 2 |
| கடுக்காய்தோல் | ,, | 2 |

இவைகளைப் பொடித்து மேல்தூவி பின் பேர்பாதி யிலையை மூடி அசையாமல் அடுப்பேத்தி தினமொன்றுக்கு இரண்டு நாழிகை ஒன்பதுநாள் யெரிக்கவும் சிதரச்சுண்டின பிறகு நன்றாய் பிசைந்து கிட்டியால் பிழிந்து சரிஎடை சித்தாமணக் கெண்ணை சேர்த்து மெழுகுபதங் காச்சவும் அரையணாயிடை பிரமாணம் சாப்பிட்டு இரண்டுநாழிகை பொறுத்து தயிர்சாதம் சாப்பிடவும். தீரும் வியாதிகள பித்தம் நார்ப்பது தலைச்சுண்டு தலைப்புத்து தலைநடுக்கல் தேகநடுக்கல் காமாலை தலைமயிர் வுழுந்து போகிறது கால்கை அசதி பித்தபாண்டு முதலியவைகள் நீங்கும் விந்துகட்டி பலம் அதிகமாகும் இச்சாபத்தியம்.

## குழந்தைகட்கு மாந்த யெண்ணெய்

சன்னாசி கிழங்கென்று சொல்லுகின்ற செம்பிரண்டை நெடுங்கொடியாழப்படராத குருங்கொடியின் கிழங்கு முள்ளங்கிக்கிழங்கு போலிருக்குமதை பில்லை பில்லையாக திருத்தியதை பலம் 25,

| | | |
|---|---|---|
| வெங்காயம் | பலம் | 10 |
| உரித்தவெள்ளைபூண்டு | ,, | $2\frac{1}{2}$ |
| சித்தாமணக்கெண்ணை | வீசை | $1\frac{1}{4}$ |

இவை நான்கையுஞ் சேர்த்து அடிப்பிலிட்டு துடுப்பினல் துழாவச் சிலங்கை சப்தத்தில் யெடுத்து வடித்து வைத்துக் கொண்டு அதில்,

| | | |
|---|---|---|
| கரிமஞ்சள் | பலம் | அரை |
| வெந்தயம் | ,, | அரை |
| கார்ப்போகவரிசி | ,, | அரை |
| வெட்பாலையரிசி | ,, | 1 |
| கருஞ்சீரகம் | ,, | அரை |

அதில் இவைகளை யெளம்வருப்பாய் வருத்து வடிகட்டி ஷெ யெண்ணெயில் கலக்கிக் குழந்தைகளுக்கு ஒருவீசை ஒரு கரண்டி கொடுத்தால் மாந்தம் அணுகாது இச்சாபத்தியம்.

### கரப்பாணெண்ணை உள்ளுக்கும் மேற்பூசுக்கும்

| | | |
|---|---|---|
| கார்ப்போகவரிசி | பலம் | அரை |
| சீரகம் | ,, | அரை |
| வெட்பாலையரிசி | ,, | அரை |
| கருஞ்சீரகம் | ,, | அரை |
| ஏலம் | ,, | அரை |
| கம்பிப்பிசின் | ,, | அரை |
| கடுகுரோகணி | ,, | எட்டி லொன்று |

இவைகளையும் பொடித்து சிருதுத்திவேர் பட்டை பலம் 5 நையத்தட்டி வெளக்கெண்ணெய் படி அரைவிட்டு மேற்படி சரக்குகளையுஞ் சேர்த்துக் கல்வத்திலிட்டு ஒருஜாமம் நன்ருய் அரைத்து மூன்றுநாள் சூரியபுடம் வைத்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூச மண்டைக்கரப்பான் கைகால் ரணம் உப்பு போலுதிர்ந்துபோம் இச்சாபத்தியம்.



### பித்தத்திற்குக் கியாழம்

| | | |
|---|---|---|
| சீரகம் | பலம் | $\frac{1}{4}$ |
| சுக்கு | ,, | $\frac{1}{4}$ |
| பேய்பீர்க்கு | ,, | $\frac{1}{4}$ |
| சீந்தில்கொடி | ,, | $\frac{1}{4}$ |
| பர்ப்படாகம் | ,, | $\frac{1}{4}$ |
| கொத்தமல்லி | ,, | $\frac{1}{4}$ |

இந்த ஆறுதினுசுகளையும் தட்டிப்போட்டு ஒருபடி ஜலம் விட்டு காப்படியாகச் சுண்டக் காய்ச்சி காலை மாலை மூன்று நாள் சாப்பிட்டுக் கொண்டுவர தலை சுற்றலானப் பித்தமானது அகன்றுபோகும்.

### மேகம் பாண்டு சூலை கிரந்தி குஷ்டம் இவைகட்கு பறங்கிப்பட்டை சூறணம்

5 பலம் பறங்கிப்பட்டையை நிறுத்தெடுத்து சூறணித்து அதற்குச் சரியிடை வெள்ளை சர்க்கரை கலந்து ஒருமண்டலம் 40-நாள் சாப்பிட்டுக் கொண்டுவர மேகம் இருபத்தியொன்றும் சூலை ஆறும் குஷ்டம் பதினெட்டும் கிரந்தியுந் தீரும் ஆனல் பச்சையாகவும் அருந்தலாம்.

### ஆறுவித மூலத்திற்கும் மருந்து

| | | |
|---|---|---|
| காட்டுக்கருணைகிழங்கு | பலம் | 1 |
| கரிக்கருணைகிழங்கு | ,, | 1 |
| காராக்கருணைகிழங்கு | ,, | 1 |
| புளிக்கருணை | ,, | 1 |

இவைகளை அரைத்து ஆட்டுமோரில் கலந்து 3-நாள் சாப்பிட்டுவர மூலம் ஆறும் நீங்கும்.

### பித்தத்திற்குக் கியாழம்

ஆற்றுமணலை ஒருபாண்டத்தில் வறுத்து அதின்மேல் முசுமுசுக்கையின் சார்பிழிந்து அரைபடி ஜலம் விட்டுப் பதமாகக் காய்ச்சி 3-நாள் சாப்பிட சர்வ பித்தமுந் தீரும் மயக்கம்போம்.

### சர்வ வீக்கங்களுக்கும் கூழு

| | | |
|---|---|---|
| சங்கன்வேர் | பலம் | அரை |
| பச்சரிசி | படி | அரை |

இவை இரண்டையு மிடித்து கூழுபோல் காய்ச்சி குடிக்க சகலமான வீக்கங்களும் வாடும் ஆனல் மோர்விட்டுக் காய்ச்சவும்.

### நீர் கட்டுக்குக் கியாழம்

| | | |
|---|---|---|
| பூனைக்கீரை | பலம் | $\frac{1}{4}$ |
| நெரிஞ்சல் | ,, | $\frac{1}{4}$ |
| சிறுகீரை | ,, | $\frac{1}{4}$ |
| வெள்ளிரிவிரை | ,, | $\frac{1}{4}$ |

இவைகளை ஒருபடி நீரில்போட்டு கால்படியாகச் சுண்டக் காய்ச்சி காலை மாலை யிருவேளையும் மூன்றுநாள் சாப்பிட்டுக் கொண்டுவர நீர்கட்டானது தீர்ந்து தாராளமாய் நீரானது யிறங்கும்.

### நீரழிவுக்கு கியாழம்

| | | |
|---|---|---|
| ஆவாரம்யிலைதூள் | பலம் | $\frac{1}{4}$ |
| கல்மதம் | ,, | $\frac{1}{4}$ |
| கொன்றைபட்டை | ,, | $\frac{1}{4}$ |
| மிளகு | ,, | $\frac{1}{4}$ |

இவைகளை தட்டி ஒருபடி ஜலத்தில் போட்டுக் கால்படியாக வற்றக் காய்ச்சி காலை மாலை யிருவேளையும் சாப்பிட நீரழிவு நீங்கும்.



### மேக சுரத்திற்கு கியாழம்

| | | |
|---|---|---|
| பனவெல்லம் | பலம் | $\frac{1}{4}$ |
| சுக்கு | ,, | $\frac{1}{4}$ |
| நிலக்குமிழ்வேர் | ,, | $\frac{1}{4}$ |

இவைகளைத் தட்டி ஒருபடி ஜலத்தில்போட்டு காற்படியாக வற்றக் காய்ச்சி வடித்து சாப்பிட வெகுநாளாகத் தங்கியிருந்த மேக சுரமானது உடனே தீரும்.

### மேகத்திற்கு பச்சிலை

வன்னியிலையை யறுத்து அம்மியில் வைத்து மைபோல் அரைத்து எருமை தயிரில் புன்னக்காய்ப் பிரமாணம் காலையில் 3-நாள் சாப்பிட மேகத்தினுலுண்டாகிய வியாதிகள் தீரும் கடும்பத்தியம்.

### மேகம் 21-க்கும் மருந்து

வேளை யொன்றுக்கு கால் பலம் சிறுகுறிஞ்சான் வேரை யெடுத்து மைபோல் அரைத்து ஆழாக்கு தேங்காய்ப் பாலில் கரைத்து மூன்றுநாள் காலையில் சாப்பிட மேகம் இருபத்தொன்றுந் தீரும் இச்சாபத்தியம்.

### வேறுமுறை மேகத்திற்கு மருந்து

பரங்கிபட்டையை பொடித்து வஸ்திரகாயஞ்செய்துவைத்துக் கொண்டு வேளையொன்றுக்கு இரண்டு காசியிடை ஆழாக்குப் பசும்பாலில் போட்டுக் காய்ச்சிக் குடிக்க மேகம் 21-ம் தீரும். இச்சாபத்தியம்.

### சன்னிக்கு கியாழம்

| | | |
|---|---|---|
| முருங்கையிர்க்கு | பலம் | $\frac{1}{4}$ |
| மாவிலிங்கம்பட்டை | ,, | $\frac{1}{4}$ |
| நொச்சியிலை | ,, | $\frac{1}{4}$ |

| | | |
|---|---|---|
| பசுமுன்னை | பலம் | $\frac{1}{4}$ |
| ஈசுரமூலிவேர் | ,, | $\frac{1}{4}$ |

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதில் தட்ட வேண்டியதைத் தட்டி ஒருபடி ஜலத்தில்போட்டு கால்படியாக சுண்டக் காய்ச்சி வடித்து காலை மாலை யிருவேளையும் சாப்பிட சன்னியானது அகன்றுபோகும்.

### சுரத்திற்குச் சூரணம்

ஒரு பலம் புளியரணையை நிறுத்தெடுத்து ஆவின்பாலில் அவித்து பொடியாக்கி வஷ்திரகாயஞ் செய்து வைத்துக் கொண்டு இரண்டு காசியிடை சூரணத்தை தேனில் குழைத்துச் சாப்பிட சுரமகலும்.

### பக்கவாதத்திற்கு கியாழம்

| | | |
|---|---|---|
| சுக்கு | பலம் | $\frac{1}{4}$ |
| முக்காவேளை | ,, | $\frac{1}{4}$ |

இவை இரண்டையும் தட்டி அரைபடி ஜலத்தில் போட்டு அரைக்கால் படியாய் வற்றக்காய்ச்சி வடித்துச் சாப்பிட பக்க வாய்வு, குன்மம் இவைகள் தீரும்.

### இருமல் சுவாசத்திற்கு கியாழம்

| | | |
|---|---|---|
| தூதுவளை | பலம் | $\frac{1}{4}$ |
| சங்கங்குப்பி | ,, | $\frac{1}{4}$ |
| அதிமதுரம் | ,, | $\frac{1}{4}$ |

இவைகளை ஒருப்படி ஜலத்தில் போட்டு காற்படியாக வற்றக் காய்ச்சி 3-நாள் 6-வேளை சாப்பிட இருமல், சுவாசகாசம் இவைகள் தீரும்.

### காசத்திற்கு மருந்து

ஒருபிடி பூனைக்காலி யிலையை பசும் வெண்ணையில் அரைத்து ஒரு பாண்டத்திலிட்டு அடுப்பேற்றிக் கிளறி புன்னக் காய் பிரமாணம் 3-நாள் சாப்பிட காசரோகமானது அகன்று போகும்.



### இருமல் க்ஷயத்திற்குக் கியாழம்

| | | |
|---|---|---|
| இஞ்சி | பலம் | கால் |
| வெள்ளெருக்கன்பூ | ,, | கால் |
| மிளகு | ,, | கால் |

இவைகளைத் தட்டிப்போட்டு அரைப்படி ஜலம்விட்டு அரைக் கால் படியாக வற்றக்காய்ச்சி காலை மாலை இருவேளையும் 3-நாள் சாப்பிட இருமல், க்ஷயந்தீரும்.

### விக்கலுக்கு

ஒருபலம் சடாமஞ்சளை நிறுத்தெடுத்து எலுமிச்சம்பழ ரசம் விட்டு மைபோல் அரைத்து தேனில்மத்தித்து 3-நாள் கொடுக்க விக்கல் நிற்கும்.

### வேறுமுறை விக்கலுக்கு

மயிலிறகைச் சாம்பலாக்கி அதில் ஒரு துளி தேன்விட்டு நாக்கில் தடவிக் கொண்டுவர விக்கல் நிற்கும்.

### வாந்தி நிற்கக் கியாழம்

| | | |
|---|---|---|
| நெல்லியீர்க்கு | பலம் | கால் |
| திப்பிலி | ,, | கால் |
| சீரகம் | ,, | கால் |
| நெற்பொரி | ,, | கால் |

இவைகளை ஒருபடி சலத்தில் போட்டு கால்படியாக வற்றக் காய்ச்சி 3-நாள் சாப்பிட வாந்தி நிற்கும்.

### பாண்டுக்குப் பச்சிலை

ஒருபிடி கரசலாங்கண்ணியும் கால்பலம் மிளகுஞ் சேர்த்து அரைத்து கடுக்காய் பிரமாணம் காலையில் மூன்றுநாள் கொள்ள பாண்டுரோகந் தீரும் இச்சாபத்தியம்.

## கைகால் பிடிப்புக்கு நீர்

வாதமடக்கி, நொச்சியிலை, பாவட்டை இவைகளை நீரிற் போட்டுக்காய்ச்சி பிடிப்புகள் மேல்விட பிடிப்புவாங்கும் ஆனல் இம்மாதிரியாக முறையே எட்டுநாள் காலை மாலை வார்க்க வேண்டியது.

## இரத்த காசத்திற்கு குண்டை

| | | |
|---|---|---|
| ஆலம்விரை | பலம் | $\frac{1}{4}$ |
| அத்திவிரை | ,, | $\frac{1}{4}$ |
| நாவல் | ,, | $\frac{1}{4}$ |
| அரடுன்விதை | ,, | $\frac{1}{4}$ |
| நிலைப்பனங்கிழங்கு | ,, | $\frac{1}{4}$ |
| மான்கொம்பு | ,, | $\frac{1}{4}$ |
| முருங்கைப்பூ | ,, | $\frac{1}{4}$ |
| தூதுளம்பூ | ,, | $\frac{1}{4}$ |

இவைகளை நிறுத்தெடுத்து பசும்பால் விட்டு மைபோல் அரைத்து வைத்துக்கொண்டு கெச்சக்காய் பிரமாணம் காலை மாலை பத்துநாள் தேன் நெய் இவைகளில் மத்தித்துச் சாப்பிட ரத்தகாசந் தீரும். இச்சாபத்தியம்.

## கரப்பானுக்கு மேல்பூசு மருந்து

| | | |
|---|---|---|
| ஏலம் | பலம் | கால் |
| சுக்கு | ,, | கால் |
| சீரகம் | ,, | கால் |

இவை மூன்றையும் பொடித்து காற்படி நல்லெண்ணையில் போட்டு ஒருநாள் சூரியபுடம் வைத்து மறுநாள் எடுத்து கரப்பான் மீது பூசிக்கொண்டுவர ஆறியுலரும் ஆனல் மூன்று நாள் பூசிக் கொண்டுவர வேண்டும்.



## சிரங்குக்குப் பூசு மருந்து

கருங்கம்பளியைச்சுட்டு நல்லெண்ணையிற் குழப்பி சிரங்குகளுக்கு பூசிவர ஆறியுலரும்.

## காசத்திற்கு சூரணம்

இரண்டு பலம் பரங்கி சக்கையை யெடுத்து பசும்பாலில் அவித் தெடுத்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக் கொண்டு இரண்டு காசியிடை தேனில் மத்தித்துச் சாப்பிட காசம் பறந்து போகும்.

## வயிற்று வலிக்கு மருந்து

தேங்காயைத்திரிகி பிட்டுவைத்து பர்பாடகத்தைப் பருப்பாக்கி இவை இரண்டையுங் கலந்து இருவேளையுந் தின்று கொண்டுவர வயிற்றுவலி தீரும். ஆனல் முத்தின தேங்காயாய் இருக்கவேண்டும்.

## நீரொழுக்கி ஆராத பிரணங்களுக்கு குப்பமேனிச் சூரணம்

குப்பமேனியிலையைக் கொண்டுவந்து நிழலிலுலர்த்தி சூரணித்து அத்துடன் சமமாகக் கருஞ்சீரகத்தை சூரணித்துக் கலந்து வைத்துக்கொண்டு 40-நாள் சாப்பிட்டுக் கொண்டுவர பித்தம், வாய்வு இவைகளைப் போக்கும் பசியுண்டாம் மந்தம் தீரும் ஆருத விரணங்கள் ஆறியுலரும்,

## பவுத்திரங் கண்டமாலைக்கு பத்து

| | | |
|---|---|---|
| அமுக்கனுங்கிழங்கு | பலம் | 1 |
| பெருங்காயம் | ,, | 1 |

இவை இரண்டையும் சந்தனக் கல்மேல் வைத்து கோழி முட்டை வெள்ளம்பிலியைவிட்டு மைபோல் அரைத்து வழித்து அரையாப்பு புண் கண்டமாலை பவுத்திரம் இன்னும் பலவிதமான மேகவிரணங்களுக்கு மேல்பூசிகொண்டுவர ஆறியுலரும்

## பவுத்திரம் கண்டமாலைக்கு விருத்தம்

வகுக்கக்கேள் கண்டமாலை பவுத்திரங்கள்
வலுமையுள்ள விப்புருதி வீக்கந்தானும்
தொகுக்கக்கேள் துடை வாழை புண்சூலைத்தான்
தொந்திரவு செய்யும் பிளவை வீக்கத்தோடு
மிகுத்திட்ட அரையாப்பு மூன்றுமெய்யா
வேதனைகள் செய்யாக லுடைந்துபோக
பகுக்கக்கே ளதற்குரிய மருந்தைநீயும்
படியினிலே கூறுவேன் பரிந்துதானே.

### இதுவுமது

பரிந்துடனே அமுக்கனுங் கிழங்கிரேடும்
பாசமுள்ள பெருங்காய மிரண்டுங் கொண்டு
தெரிந்திடவே கோழிமுட்டை தன்னைவாங்கி
திகழுமதின் வெள்ளாம்பல் தன்னைவிட்டு
நெரிந்திடவே சந்தனக்கல் தனிலுரைத்து
நேமமா மைபோலே வாரிக்கொண்டு
சொரிந்திடவே யப்புண் மேற்கனமாய்பூசிச்
சொலப்போகுங் கஷாயத்தின் சூக்ஷங்கேளே.

### இதுவுமது

கேளப்பா கரசநாங்கண்ணி சாற்றிற்
கீரத்தியுள்ள கற்ருழை மடலைச்சீவி
வெளப்பாவுள்ளிருக்குஞ் சோற்றைத்தானும்
விதமாகவெடுத்தந்த சாற்றிற் சேர்த்து
நாளப்பா யிரவியினி காயவைத்து
நன்ருகப்பத்து பலமானபோது
ஆளப்பா *திருகடுகு *திருபலாதி
அதைக் கொண்டு வறுத்திடித்து வதனிற்சேரே.

---

* திருகடுகு-சுக்கு மிளகு-திப்பிலி,
* திருபலாதி-தான்றி-நெல்லி-கடுக்காய்.



சேர்த்திந்த வகைகளெல்லா மொன்ருகத்
தீயினிலோ காயவைத்து மெழுகதாக
பார்த்ததனையிரக்கி கொண்டுடனேகேளாய்
பகருஞ்சர்க்கரை பலந்தான் பத்துகொண்டு
கீர்த்தியுடனதிற்கலந்து எட்டொன்ருக்கி
கேளப்பாசாடியினில் வைத்துக்கொண்டு
பூர்த்தியாய்ப் புன்னக்காயளவதாகப்
* புன்னியனே மண்டலங் தானுென்றுகொள்ளே.

மண்டலந்தானுளொன்றுக் கிருபோதாக
மாராமலதையருந்த மைந்தாய்கேளாய்
கண்டமாலைகள் பவுத்திரம் வீக்கம் தானும்
கட்டியதோர் துடவாழை அரையாப்போடு
கொண்டபுண் புரைகளெல்லாங் கெதிகெட்டோடும்
குருவாகவதையெண்ணி செய்திட்டாலே
அண்டிடாதெப்போது மாய்ந்துபாருய்
அப்பனேயாயிசொல்லு மதியிதாமே.

### கட்டுவாதி லேகியம்

| | | |
|---|---|---|
| சீமை அதிவிடையம் | விராகனிடை | 3 |
| கடுக்காய்ப்பூ | ,, | 3 |
| மாசிக்காய் | ,, | 3 |
| மாதுளம்பழத்தோல் | ,, | 3 |
| ஜாதிக்காய் | ,, | 3 |
| லவுங்கப்பட்டை | ,, | 3 |
| போஸ்தக்காய் | ,, | 3 |
| கசகசா | ,, | 3 |
| மாங்கொட்டை பருப்பு | ,, | 3 |
| புளியங்கொட்டைதோல் | ,, | 3 |

| | | |
|---|---|---|
| அபினி | விராகனிடை | $1\frac{1}{2}$ |
| கோரோஜனம் | ,, | $1\frac{1}{2}$ |
| நல்லவெல்லம் | பலம் | $1\frac{1}{2}$ |
| பசுநெய் | ,, | 3 |

நெய்யை பாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றி வெல்லத்தைப் போட்டு இவை இரண்டும் கலந்து பாகு ஆகும்போது மேற்படி தினுசுகளை சூரணஞ் செய்து வைத்துக் கொண்டிருந்து பாகில் சிருகசிருகப் போட்டுக் கிளறி லேகியம்போல் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆகும், பெரியவர்களுக்கு சுண்டக்காய் பிரமாணமும் குழந்தை களுக்கு துவரை பிரமாணமும் காலையில் கொடுக்கவும் மூன்று வேளையில் சீதக்கழிச்சல் ரெத்தமந்தம் அல்லது அஜீரணம் இவைகள் நிற்கும்.

### மேகம் 21-க்கும் லேகியம்

| | | |
|---|---|---|
| செகப்புநாயுரிவேர் | பலம் | அரை |
| செகப்புநெரிஞ்சிவேர் | ,, | அரை |
| கையாந்தகரைவேர் | ,, | அரை |
| மாவிலிங்கன்வேர் | ,, | அரை |
| மிளகரணைவேர் | ,, | அரை |
| சிவன்வேம்புவேர் | ,, | அரை |
| காட்டுக்கருணைவேர் | ,, | அரை |
| நீர்முள்ளிவேர் | ,, | அரை |
| வில்வவேர் | ,, | அரை |
| துத்திவேர் | ,, | அரை |
| வெள்ளெருக்கன்வேர் | ,, | அரை |
| சீதேவிசெங்கழனிவேர் | ,, | அரை |
| நிலைமந்தம்வேர் | ,, | அரை |
| வெள்ளைவிஷ்ணுகாந்திவேர் | ,, | அரை |



| | | |
|---|---|---|
| ஆனைநெரிஞ்சிவேர் | பலம் | அரை |
| பொன்னுங்கண்ணிவேர் | ,, | அரை |
| உப்பிலாங்கொடிவேர் | ,, | அரை |
| அவுரிவேர் | ,, | அரை |
| முடக்கத்தான்வேர் | ,, | அரை |
| புங்கன்வேர் | ,, | அரை |
| கருவூமத்தன்வேர் | ,, | அரை |
| எட்டிவேர் | ,, | அரை |
| ஆடுதின்னுப்பாளைவேர் | ,, | அரை |
| விலாரிவேர் | ,, | அரை |
| சிருகட்டுக்கொடிவேர் | ,, | அரை |
| ஆலம்பட்டை | ,, | அரை |
| பூமிசர்க்கரைக்கிழங்கு | ,, | அரை |
| மருதம்பட்டை | ,, | அரை |
| பூவரசன்பட்டை | ,, | அரை |
| செங்கரிந்தாபட்டை | ,, | அரை |
| பாபட்டையிலை | ,, | அரை |
| புளிகருணைக்கிழங்கு | ,, | அரை |

இந்த முப்பத்திரண்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக் கொண்டு ஒரு பாண்டத்தில் அரைவீசை பசும் நெய்யைவிட்டு அடுப்பி லேற்றி நெய்யுரிகினவுடன் சர்க்கரை பலம் பத்து போட்டு மேற் படிசூரணத்தை சிறுகச்சிறுக தூவிக்கொண்டே கிளறவேண்டி யது. நெய்போதாவிட்டால் முன்பாகக்காய்ச்சி யேடுகட்டிய பசும்பால் போதுமானமட்டும் நிதானமாய் விட்டுக் கொண்டு கிளறவும் இறக்கும்போது மலைத தேன் 5-பலம் விரையில்லாத பழைய திராக்ஷிப்பழம் பலம் 5-பொடியாகக் கத்தரித்த பாதம் பருப்பு பலம் 5-போட்டுக் கிண்டிவைத்துக் கொள்ளவும் கசப்பு

தோன்ருமல் தின்பதற்கு இனிப்பாகவும் வியாதியைக் கண்டிக்கும் தன்மையுள்ள லேகிய மென்றறியவும் காலை மாலை இருவேளையும் புன்னைக்காய் வீதம் 20 நாள் சாப்பிடவும். மீன், கருவாடு, இறைச்சி, லாகிரி, ஸ்ரீ போகம் புகை சுருட்டு இவை கள்கூடாது. மேகம் 21 தீரும் கருமேகத்தையுங் கண்டிக்கும், இச்சாபத்தியம்.

### இரச ஔஷதஞ் சாப்பிட்டதினல் உண்டாகிற உமிழ் நீர்சுரப்பிக்கும் ஈசில் உண்டாகும் புண்களுக்கும் மருந்து

ஒருதுண்டு காசுகட்டியை வாயிலிட்டு வைத்துக் கொள்ள வேண்டும். இப்படி தினம் இரண்டு மூன்றுதரஞ் செய்யலாம். தொண்டை நோவுக்கு நல்லதாயிருக்கும் மிகுந்த நாற்றமானப் பழுப்புடனே யிருக்கிற பழையபுண்களுக்கு ஒருதிரும் காசுக் கட்டியை ஒரு அவுன்ஸ் மெழுகு பிளாஸ்திரியில் சேர்த்துயிட வேண்டும். இதுவுமன்றி 6 திரும் காசுகட்டியை அரைப்புட்டி கொதிக்கிற ஜலத்தில்விட்டு ஆறினபின் வடிகட்டிப் புண்களை காலையிலுஞ் சாயந்திரமும் கழுவினலுங் குணமுண்டாகும். முலைக்காம்பில்வரும் இரணங்களுக்கும் நன்று, முலைக்காம்பில் இரணமிருக்குஞ் ஸ்திரீகள் பிரசவிக்கிறதற்கு இரண்டு மாதத்திற்கு முன் முலைக்காம்புகளிலும் முலைகளிலும் மேற்படி தண்ணீரைத் தொட்டுவைத்தால் குழந்தை பால் குடிக்கிற சமயமாகும்போது இரணம் உண்டாகாது பல்குழிந்தும் அதற்குள் தசை வளர்ந்து மிருக்கிற பல்வலிக்கு ஒரு துண்டு காசுக்கட்டியை அந்தக் குழியில் திணித்தாலும் வாயிலிட்டு ஒதிக்கிக்கொண்டாலும் சுகத்தைக் கொடுக்கும்.

### திரேகத்தில் எங்கேயாகிலும் கொப்பளமுண்டாக

சிவந்த சித்திரை மூலமும் வேரைப்பறித்தவுடன் அதின் தோலை யுரித்துக் கொஞ்சம் கஞ்சித்தண்ணீர் விட்டு கட்டியாய் அரைத்து ஒரு துண்டுதுணியில் தடவிக் கொப்பள முண்டாக்க



வேண்டும் வேண்டிய யிடத்தில் வைத்துக் கட்டவேண்டும் கட்டி 5 மினிட்டு நேரஞ் சென்றபொழுது எரிவும் வலியுமுண்டாகி அது அரைமணிவரை அதிகரித்திருக்கும் இதின்பின் அதை எடுத்துவிட்டால் எரிவும் வலியுந் தணிந்து அப்புறம் 12 அல்லது 18 மணிநேரத்தில் பெரிய கொப்பளமுண்டாகும் இதிலுண்டாகி யிருக்கிற சலத்தைக் குத்தியெடுத்து விட்டு ஒரு வாழையிலை துண்டை வைத்துக் கட்டவேண்டும். புண் சுருக்காய் ஆறிபோகும் இப்படிக்கொத்த கொப்பள முண்டாக்கும் ஔஷதங்களை கோரமான இருமலுக்கு நெஞ்சிலும் தலைவலிக்கும் மற்ற நோய்களுக்கும் கழுத்தின் பிடரியிலும் வைத்துக் கட்டினுல் நன்று.

### இரணங்களுக்கு மருந்து

சிரு குறட்டாய் வேரைத் தூளாயிடித்து வேப்பெண்ணையிற் கலந்து கெட்ட புண்களுக்குப் பூசினுல் விலைப்பெற்றப் பரிகாரமாய்க் காணப்படும். சிலசமயத்தில் காதிலுள்ள புண்ணும் ஆறும் மூக்கிலுள்ள புண்களுக்கும் உபயோகிக்கப்படும்.

### படர்தாமரைக்கு மருந்து

சீமை அகத்தியிலையைப் பறித்து அரைத்து அதற்குச் சமனிடை மெழுகு பிளாஸ்திரி அல்லது தேங்காயெண்ணையிற் சேர்த்துத் தினந்தோறும் இரண்டுதரம் அழுத்தி தேய்த்துவர தோலைப் பற்றிய படர்தாமரை நீங்கும்.

### குழந்தைகளுக்குக்காணும் வாதபித்த சிலேத்தும மாந்தங்கட்குக்கியாழம்

| | | |
|---|---|---|
| ஓமம் | பலம் | கால் |
| வெள்ளுள்ளி | ,, | கால் |
| மிளகு | ,, | கால் |
| திப்பிலி | ,, | கால் |
| சுக்கு | ,, | கால் |

இவைகளை நிறுத்தெடுத்து துணியில் மூட்டைகட்டி ஒரு மண் பாத்திரத்திலிட்டு அதில் ஒருபடி ஜலம்விட்டு அடுப்பேற்றி ஆழாக்காய் வற்றக்காய்ச்சி வடித்து காலையில் ஒருபாலடை வீதங் கொடுத்துவர நிவர்த்தியா தம் இச்சாபத்தியம்.

### வேறுமுறை கியாழம்

| | | |
|---|---|---|
| வேளைவேர் | பலம் | கால் |
| சுக்கு | ,, | கால் |
| வெந்தயம் | ,, | கால் |
| வெள்ளைப்பூண்டு | ,, | கால் |
| வசம்பு | ,, | கால் |
| ஓமம் | ,, | கால் |

இவைகளை நிறுத்தெடுத்து வறுத்து ஒருபடி ஜலத்தில் போட்டு அடுப்பேற்றி எட்டொன்ருய் வற்றக்காய்ச்சியக் கியாழத்தில் சங்களவாக இருவேளையுங் கொடுத்துவரத் தீரும் இச்சாபத்தியம்.

### வேறுமுறை கியாழம்

| | | |
|---|---|---|
| நுணாயிலை | பிடி | 1 |
| நொச்சியிலை | ,, | 1 |
| கழற்கொடியிலை | ,, | 1 |

இவைகளை யெடுத்து ஒரு சட்டியிலிட்டுக் கருக்கி அதில் ஒரு படி ஜலம்விட்டு பின்பு அதில் ஓமம் வசம்பு சுக்கு மிளகு பொடுதலைக்காய் திப்பிலி இவைகளை நல்லெண்ணையை விட்டுச் சிவக்க வறுத்து துணியில் மூட்டை கட்டிப்போட்டு அடுப்பேற்றி எட்டொன்ருய் வற்றக் காச்சி வடித்தக் கியாழத்தில் சங்களவு கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.



### வேறுமுறை கியாழம்

வேலிப்பருத்தியிலை வேளைவேர் நொச்சி பொடுதலை நுணா முருங்கை இவைகளின் சீர்க்கு வகைக்கு ஒருபிடியை வறுத்து ஒரு படி ஜலத்தில் போட்டு அதில் ஓமம் சுக்கு மிளகு திப்பிலி வசம்பு இவைகள் வகைக்கு பலம் கால் எடுத்து வெதுப்பி துணியில் முடித்துப் போட்டு அடுப்பேற்றி எட்டொன்ருய் வற்றக் காய்ச்சியக் கியாழத்தில் சங்களவுக் கொடுத்துவரத் தீரும், இச்சாபத்தியம்.

### ஊதுமாந்தத்திற்கு கியாழம்

பொடுதலை வேம்பு மாம்புளி நுணா நொச்சி வேலிப்பருத்தி இவைகளின் யீர்க்கு ஓர் சமமாக எடுத்து அதற்கு நிகர் ஓமம் உள்ளி திப்பிலி சேர்த்திடித்து ஒருப்டி ஜலத்திற்போட்டு ஆழாக்காய் வற்றக்காச்சியக் கியாழத்தை வடித்து சங்களவு காலை மாலை இருவேளையுங் கொடுத்துவர (தீரும் மாந்தங்கள்) ஊது மாந்தம் பேதிமாந்தம் இவைகள் சுத்திமாந்தம் தீரும் இச்சா பத்தியம்.

### நீர்மாந்தத்திற்கு கியாழம்

| | | |
|---|---|---|
| நீலிவேர் | பலம் | கால் |
| செல்வியம் | ,, | கால் |

இவை இரண்டையும் நிறுத்து தட்டி அரைபடி ஜலத்தில் போட்டு அரிக்கால்படியாய் வற்றக்காய்ச்சி வடித்தக் கியாழத்தில் சங்களவு கொடுக்கத் தீரும்.

### விழாமாந்தத்திற்கு கியாழம்

| | | |
|---|---|---|
| நுணாவேர் | பலம் | கால் |
| நொச்சிவேர் | ,, | கால் |
| வேளைவேர் | ,, | கால் |
| ஓமம் | ,, | கால் |

| | | |
|---|---|---|
| பொடுதலை | பலம் | கால் |
| வெங்காயம் | ,, | கால் |
| வசம்பு | ,, | கால் |

இவைகளை நிறுத்தெடுத்து நொருக்கி வெதுப்பி ஒருபடி ஜலத்திற் போட்டு எட்டொன்ருய் வற்றக்காச்சி சங்களவாக இருவேளையுங் கொடுத்துவர தீரும். இச்சாபத்தியம்.

### பேர்மாந்தத்திற்கு கியாழம்

நுணா வேலிப்பருத்தி பொடுதலை வெற்றிலை இவைகள் வகைக்கு விராகனிடை 1, ஆமைஓடு வசம்பு பூண்டு ஓமம் கிராம்பு இவைகளை சமமாய் நிறுத்தெடுத்து வெதுப்பி ஒருபடி ஜலத்தில்போட்டு யெட்டொன்ருய் வற்றக்காச்சியக் கியாழத்தில் சங்களவு கொடுக்கத் தீரும்,

### பால்மாந்தத்திற்கு கியாழம்

| | | |
|---|---|---|
| பொடுதலைக்காய் | பலம் | கால் |
| இந்துப்பு | ,, | கால் |
| வெள்ளைப்பூண்டு | ,, | கால் |
| மிளகு | ,, | கால் |

இவைகளை நிறுத்தெடுத்து சட்டியிலிட்டு வெதுப்பிட அதில் ஒருபடி ஜலம்விட்டு காற்படியாக வற்றக்காச்சி வடித்தக் கியாழத்தில் காலையில் சங்களவு கொடுத்துவர தீரும் இச்சாபத்தியம்.

### கட்டுமாந்தத்திற்கு கியாழம்

| | | |
|---|---|---|
| சீந்தல்தண்டு | பலம் | கால் |
| களிப்பாக்கு | ,, | கால் |
| சிவதைவேர் | ,, | கால் |



| | | |
|---|---|---|
| கடுக்காய் | பலம் | கால் |
| சுக்கு | ,, | கால் |
| கடுகுரோகணி | ,, | கால் |

இவைகளை நிறுத்தெடுத்து தட்டி சட்டியிலிட்டு அதில் ஒருபடி ஜலம்விட்டு அடுப்பேற்றி எட்டொன்ருய் வற்றக் காய்ச்சி வடித்தகியாழத்தை சங்களவாக மூன்று தினங் காலையில் கொடுத்துவர தீரும். இச்சாபத்தியம்.

### வேறுமுறை கியாழம்

| | | |
|---|---|---|
| சிறுதேக்கு | பலம் | கால் |
| வாய்விளங்கம் | ,, | கால் |
| வால்மிளகு | ,, | கால் |
| கடுகுரோகணி | ,, | கால் |
| சுக்கு | ,, | கால் |
| ஏலம் | ,, | கால் |
| திப்பிலி | ,, | கால் |
| இலவங்கம் | ,, | கால் |
| தான்றிக்காய் | ,, | கால் |
| தக்கோலம் | ,, | கால் |
| போஸ்தகாய் | ,, | கால் |

இவைகளை நிறுத்திடித்து இரண்டு படி ஜலத்திற்போட்டு அடுப்பேற்றி எட்டொன்ருய் வற்றக்காச்சி வடித்தக்கியாழத்தில், சங்களவாக மூன்றுதினங் கொடுக்க கிராணிமாந்தம் சுரக்கட்டி விஷதோஷங்கள் இசுவுமாந்தம் சோகை காமாலை சுரம் கோழை கோட்டாவி பெருமல் தும்மல் பித்தகணம் பாண்டு இவை முதலானதுந் தீரும் இச்சாபத்தியம்,

### வேறுமுறை கியாழம்

| | | |
|---|---|---|
| பொடுதலையீர்க்கு | பிடி | 1 |
| மாவிலையீர்க்கு | ,, | 1 |
| புளியனீர்க்கு | ,, | 1 |
| வேப்பனீர்க்கு | ,, | 1 |
| நொணுயீர்க்கு | ,, | 1 |
| வேலிப்பரித்தியிலையீர்க்கு | ,, | 1 |
| நொச்சியிலையீர்க்கு | ,, | 1 |
| வெள்ளைப்பூண்டு | கழஞ்சு | 1 |
| திப்பிலி | ,, | 1 |
| ஓமம் | ,, | 1 |

இவைகளை நிறுத்திடித்து ஒருபடி ஜலத்திற்போட்டு அடுப்பேற்றி எட்டொன்ருய் வற்றக்காச்சி வடித்தக் கியாழத்தில் வேளை வேளையொன்றுக்கு சங்களவுவீதம் மூன்றுநாள் கொடுக்க ஊதுமாந்தம் போர்மாந்தம் செரியாமாந்தம் கட்டு மாந்தம் சந்திமாந்தம் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

### வாதபித்தகணத்திற்குக் கியாழம்

| | | |
|---|---|---|
| சீரகம் | பலம் | கால் |
| வில்வத்திரி | ,, | கால் |
| வெங்காயம் | ,, | கால் |
| வெந்தயம் | ,, | கால் |

இவைகளை நிறுத்தெடுத்து வெதிப்பி ஒருபடி ஜலத்தில் போட்டு அடுப்பேற்றி எட்டொன்ருய் வற்றக்காச்சி வடித்த கியாழத்தில் சங்களவு கொடுக்க வாதபித்தகணம் தீரும். இச்சாபத்தியம்.

### கணமாந்தத்திற்கு சாறு

நொச்சி துளசி முசுமுசுக்கை இவைகளின் இயி வகைக் கொருபிடி யெடுத்து சட்டியிலிட்டுப்பிட்டவித்துச் சாறுபிழிந்து சங்களவு கொடுக்க தீரும், பத்தியமில்லை.



### ஊதுமாந்த கணத்திற்குக் கியாழம்

ஊசிமல்லி சுக்கு மிளகு திப்பிலி இவைகளை ஓர்நிறையாய் நிறுத்தெடுத்து பொடித்து ஒருபடி ஜலத்தில் போட்டு யெட்டொன்ருய் வற்றக்காச்சியக் கியாழத்தில் சங்களவாக யிருவேளையுங் கொடுத்துவர ஊதுமாந்த கணந்தீரும் இச்சா பத்தியம்.

### நீர்க்கணத்திற்கு கியாழம்

| | | |
|---|---|---|
| சாரணைக்காய் | பலம் | $\frac{1}{4}$ |
| மூக்குருட்டைக்காய் | ,, | $\frac{1}{4}$ |
| பொடுதலைக்காய் | ,, | $\frac{1}{4}$ |
| சுக்கு | ,, | $\frac{1}{4}$ |
| மிளகு | ,, | $\frac{1}{4}$ |
| திப்பிலி | ,, | $\frac{1}{4}$ |
| துளசி | ,, | $\frac{1}{4}$ |
| சீரகம் | ,, | $\frac{1}{4}$ |

இவைகளை நிறுத்தெடுத்துப் பொடித்து ஒருபடி ஜலத்தில் போட்டு யெட்டொன்ருய் வற்றக்காச்சிக் கொடுக்கத் தீரும் சங்களவாக யிருவேளையுங் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

### கழிகணத்திற்கு கியாழம்

| | | |
|---|---|---|
| வெங்காயம் | பலம் | $\frac{1}{4}$ |
| வசம்பு | ,, | $\frac{1}{4}$ |
| சீக்கிராம்பட்டை | ,, | $\frac{1}{4}$ |

இவைகளை நிறுத்தெடுத்து பொடித்து ஒருபடி ஜலத்திற் போட்டு யெட்டொன்ருய் வற்றக்காய்ச்சி வடித்தக்கியாழத்தில் சங்களவு கொடுக்க தீரும் இச்சாபத்தியம்.

### மகாகணத்திற்கு கியாழம்

| | | |
|---|---|---|
| சிறுகீரைவேர் | பலம் | எட்டிலொன்று |
| விஷ்ணுகிராந்தி | ,, | எட்டிலொன்று |
| கீழ்காநெல்லி | ,, | எட்டிலொன்று |
| சிறுபூளைவேர் | ,, | எட்டிலொன்று |
| வெதுப்படகி | ,, | எட்டிலொன்று |
| சீந்தில்தண்டு | ,, | எட்டிலொன்று |
| ஆடாதோடை | ,, | எட்டிலொன்று |
| சீரகம் | ,, | எட்டிலொன்று |

இவைகளை நிறுத்தெடுத்து பொடித்துச் சட்டியில்போட்டு அடுப்பேற்றி யிளம்வறுப்பாக வறுத்து அதில் இரண்டுபடி ஜலம் விட்டு யெட்டொன்ருய் வற்றக்காச்சி யிறைக்கியக் கியாழத்தில் சங்களவாக கொடுத்துவர தீரும் இச்சாபத்தியம்.

### கணங்களுக்குப் பொதுபிரயோகக் கியாழம்

| | | |
|---|---|---|
| நீர்முள்ளி | பலம் | $\frac{1}{4}$ |
| ஈருள்ளி | ,, | $\frac{1}{4}$ |
| கடுக்காய் | ,, | $\frac{1}{4}$ |
| தான்றிக்காய் | ,, | $\frac{1}{4}$ |
| நெல்லிவற்றல் | ,, | $\frac{1}{4}$ |
| சங்கம்வேர் | ,, | $\frac{1}{4}$ |

இவைகளை நிறுத்தெடுத்து ஒருபடி மோரில் போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்து யிறக்கி இரும்பு பாத்திரத்தில் வடித்து வைத்துக்கொண்டு ஒருசங்கு இரண்டுசங்கு தினங்கொடுக்க தீராத கணமுந் தீரும் இச்சாபத்தியம்.

### வில்வாதித் தைலப் விருத்தம்

சாந்தமாம் வில்வாதித் தயிலங்கேளு
தாரணியில் வில்வவேர் பலந்தான்பத்து



பாந்தமாயிடித்ததனைப் பதக்குநீரில்
பருவமாய்க்காய்ச்சி யெட்டொன்ருக்கிப்
போந்தயெண்ணை நாழிவிட்டுச் சந்தனம்பலந்தான்
புகழானக் கியாழத்தி லரைத்துபோடு
வாய்ந்தமெழுகாறல் வடித்துக் கொண்டு
வாகாகமுழுகிவர வரிசைகளே.

(இ-ள்) வில்வவேர் பலம்பத்து நிறுத்தெடுத்து உரலிலிட்டு துவைத்து ஒருபாண்டத்தில் பதக்குநீர்விட்டு அதிலிந்தவேரைப் போட்டு அடுப்பேற்றி யெட்டொன்ருக வற்றக்காச்சி அதில்நல்லெண்ணை நாழிவிட்டு ஒருபலம் சந்தனத்தை அரைத்துபோட்டு மெழுகுபதமாகக் காச்சி வடித்து வைத்துக்கொண்டு முழுக வேண்டும் பதக்கென்பது இரண்டுபடி. எ-று.

வரிசையாய்முழிகிவரப் பித்தம்போகும்
மைந்தனே கபாலத்தில் வெட்டைபோகும்
இருமைபெற ஆக்கிவைக்கு மேகம்போகும்
மிருகண்ணுந் தெளிவுண்டா மிருமல்போகும்
உரிசைபெற பித்தமெல்லா மோடிப்போகும்
உள்ளயற்சியுட்சுரங்க ளொழிந்துபோகும்
தரைமீதிற்றள்ளும் பிறக்குஞ் சூட்சஞ்சொன்னேன்
சம்பிரதாயமு மிதுதான் றரணியோர்க்கே.

(இ-) வாரத்திற்கு இரண்டுவிசை வரிசையாக முழிகிக் கொண்டுவர கபாலத்தில் வெட்டையானது தீரும், நேத்திரம் நன்ருகத் தெளிவுறும் இருமல் போகும் பித்தமயக்கந் தீரும். உள்ளயற்சி உட்சுரம் நீங்கும் தழம்பு முதலானதுந் தீரும், ஆறல் ஸ்நானஞ் செய்யும் நாள்பகல் நித்திரை போகம் இவைகளை நீக்கவேண்டும்.

### வேங்கைத் தைலம்

தரணியுள்ள மானிடர்கள் பிழைக்கவேண்டி
சாற்றுகிறேன் வேங்கையுட தைலந்தன்னை
கரணியாம் வேங்கைப்பலம் பத்துவாங்கிக்
காச்சிவிடுதூணிநீ ரெட்டொன் ருய்க்காச்சி
திரணியுள்ள கியாழத்தை வடித்துக்கொண்டு
திரமாக யெலுமிச்சம் பழமொன்ருக
அரணியாங்கி யாழத்திற் குழப்பிமைபோ
லழகான மெழுகுபத மானவாறே.

(இ-ள்) வேங்கைப் பலம் பத்து நிறுத்தெடுத்து தூணிநீரில் போட்டு அடுப்பேற்றி யெட்டொன்ருய் வற்றக்காச்சிக் கியாழத்தை வடித்துக்கொண்டு அதில் யெலுமிச்சம்பழம் ஒன்றைப் பிழிந்து மெழுகு பதமாகக்காய்ச்சி வைத்துக் கொண்டு மூழ்க வேண்டும் தூணிநீ ரென்பதுபத்தரை அல்லது 32படி. எ-று.

### பாகம் மூழ்கிவற

ஆனவைகேள் வாதமொடு சூலைபோகும்
அடர்ந்திட்ட பித்தமது மாண்டுபோகும்
பீனிசங்கள் மண்டையிடி பிரட்டல்சீதம்
பெலமான வீக்கமுதல் வாங்கிப்போகும்
மேனியெல்லாங் காந்தியுண்டாம் விஷரோகம்போம்
வெகுவாக முன்சொன்ன தயிலப்போக்கு
புனிதமாய்ச் சொல்லிவிட்டேன் தெளிவாய்பாரீர்
புகழானபற்பத்தின் போக்குநூறே.

(இ-ள) மேற்கண்ட தயிலத்தை வாரத்திற்கு இரண்டுவிசை மூழ்கிக்கொண்டுவர பித்தம் பீனிசம் மண்டையிடி பிரட்டல் சீதம் வீக்கம் அவைகள் முதலானதும் தீரும் தேகமானது காந்தியுண்டாகும் முன் கூறிய தயிலத்தின் போக்காகும். எ-று.



### வெட்டிவேர் தயிலம்

போக்கான தயிலமொன்று புகலக்கேளு
புதிதானவெட்டிவேர் பலந்தான்பத்து
நோக்காகவிடிந்ததனைப் பதக்குநீரில்
நுணுக்கமாய்க்காய்ச்சியே யெட்டொன்ருக்கி
வாக்காகவடித்தனில் யெண்ணைநாழி
வளமையாயதிமதுரம் பலந்தானென்று
தாக்காகயெண்ணைக்கு ளரைத்துக்கொண்டு
சாந்தமாய்மெழுகுபதந் தன்னில்வாங்கே.

(இ-ள்) புதிதான வெட்டிவேர் பலம்பத்து நிறுத்தெடுத்து உரலிலிட்டு யிடித்துப்பதக்கு நீரில்போட்டு அடுப்பேற்றி யெட்டொன்ருய் காய்ச்சி வடித்து அதில் நல்லெண்ணை நாழிவிட்டு ஒருபலம் அதிமதுரத்தை அரைத்துக் கலக்கி மெழுகுபதமாகக் காய்ச்சி வைத்துக் கொண்டு மூழ்குவதைக்கேளும். எ-று.

வாங்கியேமூழ்கிவர வரிசைகேளு
மானிலத்தின்பீனிசங்கள் மண்டைசூலை
யோங்கியேகுட்டமொடு பீநீர்கோவை
யொளிமருவுங்கண்புகைச்சல் காதும்ந்தம்
வாங்கியேயெய்ப்பிளவும் புகைகாலோய்வு
வறிவுகெட்டதாதுசமு மிருமடுகாந்தி
நீங்கியேபோவதற்கு மண்டலந்தான்
நேராகவொன்றைவிட்டு ஒருநாளெண்ணே.

(இ-ள்) மேற்கண்ட தயிலத்தை மூழ்கிவர பீனிசம் மண்டை சூலை, குட்டம், சோகை, கண்புகைச்சல், காதுமந்தம், வெப்பம், பிளப்பு, கைகால் ஓச்சல் இவைகள் முதலானதுந் தீரும் ஆனல் ஒருமண்டலம் நாற்பது நாள் ஒன்றெட்டொருநாள் மூழ்கிக் கொண்டுவர வேண்டும் பகல் நித்திரை போகம் இவைகளை நீக்கவேண்டும். எ-று.

## வேப்பின் தைலம்

என்னவின்ன மொருதயிலஞ் சொல்வேன்கேளா
யெளிதாகவேம்பி னிடபட்டைவாங்கி
துன்னவேகால்துலா மிடித்துக்கொண்டே
வொருதூணிநீர்விட்டு வொன்ருய்க்காய்ந்தார்
சொன்னபடி யெட்டொன்ருய் வடித்துவாங்கிச்
சுருதிபோமெண்ணெயிரு நாழிவிட்டு
நன்னயமாய யேலக்காய் பலமிரெண்டு
நலமானக்கியாழத்தி லரைத்துப்போடே .

(இ-ள்) வேம்பின்பட்டை கால்துலாம் நிறுத்தெடுத்து இடித்து தூணிநீரில்போட்டு அடுப்பேற்றி யெட்டொன்ருக வற்றக்காச்சி கியாழத்தை வடித்துக்கொண்டு அதில் நல்லெண்ணெ இரண்டு நாழிவிட்டு யேலக்காய் பலம்ரெண்டு யெடுத்து அரைத்து மேற்படி கியாழம் யெண்ணெயில் கரைத்து மெழுகு பதமாகக் காச்சிவைத்துக் கொண்டு கேளும். எ-று.

அரைத்துடனே காச்சியது மெழுகதனுல்
ஆற்றியேவடித்துவைத்து முழுகும்போது
நிரைதிட்டவாதமெல்லா மெங்கேபோச்சு
நிசமான சூலையொடு குட்டரோகம்
திரைத்திட்டதழுதணியு மேற்கொடுப்புச்
செங்கரப்பன்புண்புரைகள் சேராதோடு
முரைத்திட்டதயிலத்தி னுறுதிமெத்த
உத்தமனேமயிலமொன்று உரைக்கின்றேனே.

(இ-ள்) மேற்சொன்ன தயிலத்தை காய்ச்சி ஆற்றிவடித்து வைத்துக் கொண்டு வாரத்திற்கு இருமுறை மூழ்கிக் கொண்டு வர வாதம் சூலை குஷ்டம் தழுதணை கடுப்பு செங்கரப்பன் புண் புரைகள் இவை முதலானதும் தீரும். எ-று.



## குருந்தொட்டிவேர் தைலம்

உரைக்கின்றேன் குருந்தொட்டிவேர்பலங்கே
ளுத்தமனேயொருதுலாம் நிறுத்துப்போடு
நிரைக்கின்றேன்தூணிநீ ரெட்டொன்ருக்கி
நேரானயெண்ணெயிரு நாழிவிட்டுக்
கரைக்கிறேன் கியாழத்தி லரைத்துமைபோற்
கசகசாஇருபலந்தான் கண்டுகொள்ளு
நரைக்கின்றேனெனக்கென்ன வாதமெல்லாம்
நடுநடுங்கி யோடுமடா நயந்துபாரே.

(இ-ள்) ஒருபலம் குருந்தொட்டிவேரை நிறுத்தெடுத்து யிடித்து தூணிநீரில் போட்டு யெட்டொன்ருக வற்றக்காச்சி கியாழத்தை வடித்துக்கொண்டு அதில் நல்லெண்ணெ இருநாழி விட்டு அத்துடன் இரண்டு பலம் கசகசாவை அரைத்துக்கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாகத் தயிலத்தைக்காச்சி வடித்து வைத்துக்கொண்டு வாரத்திற்கு யிரண்டு முறையாக முழ்கிக் கொண்டுவர சகலமானவாதங்களும் நடுநடுங்கி பறந்துபோகும் ஆனுல் ஸ்நானம் செய்யும் நாள் பகல் நித்திரை போகம் நீக்கவும். எ-று.

## கொடிவேலித் தயிலம்

நயமானகொடிவேலி பலந்தான்பத்து
நன்ருகவிடித்ததனைப் பதக்குநீரில்
வயமாகக்காய்ந்துலர்த்தி யெட்டொன்ருனல்
வண்மையுடன் நல்லெண்ணை நாழிவிட்டு
நியமானபுன்னக்காய் விகிதமாவெண
நேய்யுடனே சீரகமோர்பலந்தானிட்டு
சியமாகஅரைத்ததனைப் பாகிற்சேர்த்து
சீரானமெழுகுபத மானவாரே.

(இ-ள்) கொடிவேலிப் பலம் பத்து நிறுத்தெடுத்து யிடித்துப் பதக்கு நீரில்போட்டு எட்டொன்ருக வற்றக்காய்ச்சி வடித்துக் கொண்டு அதில் நல்லெண்ணைநாழிவிட்டு புன்னக் காய்ப் பிரமாணம் பசும்வெண்ணைபோட்டு ஒருபலம் சீரகத்தை அரைத்து அதிற் கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாக காச்சி யிறக்கவேண்டும் கொடிவேலியென்பது சித்திரமூலம்வேர் ஆவெண்ணை யென்பது பசும்வெண்ணை. எ-று.

ஆனதயிலம் வடித்தேமுழுகும்போது
ஆனந்தவாய்வுனுட அந்தரமாம்வாய்வு
தேனமருங்குழலாள்கேள் வாதமெல்லாம்
சிறுசொறியுஞ் சிரங்குகுஷ்டம் தினவும்போகும்
போனதொரு அரையாப்பு கிரந்திசூலை
புண்புரைகள் பிளவுமுதற் பொடிப்புவீக்கம்
நானென்னவந்தநோ யனத்துந்தீரும்
நல்லதொருதயிலமது நாடிப்பாரே.

(இ-ள்) மேற்சொன்ன தயிலத்தை வாரத்திற்கு இரண்டு விசை மூழ்கிக் கொண்டுவர வாய்வு முதலானதுந் தீரும் வாதம் போகும் சொறி சிரங்கு குஷ்டம் தினவு அரையாப்பு கிரந்திசூலை புண் புறைகள் பிளவை பிடிப்பு வீக்கம் இவைகள் முதலானதும் தீரும் ஆனுல் ஸ்நானஞ் செய்யும் நாள் பகல் நித்திரையும் ஸ்ரீபோகமும் விலக்க வேண்டும் மீன் கருவாடு கடுகு நல் லெண்ணை நீக்கவும். எ-று.

## சீரகத் தயிலம்

பாரப்பா சீரகமும் பலமிரண்டு
பதமாகவிடித்துநீர் பதக்கிற்போட்டு
சீரப்பாயெட்டொன்ருய்க் கியாழம்வாங்கித்
தெளிவானநல்நெய்யை படிதான்சேரு
காரப்பாகார்போகி பலந்தானென்று
கஷாயத்திலரைத்ததனைக் கலக்கிக்கொடு
ஏரப்பா மெழுகுபத மாகவாங்கி
இயல்பாகமூழ்கிவர குணத்தைக்கேளு.

(இ-ள்) இரண்டு பலம் சீரகத்தை நிறுத்தெடுத்து யிடித்து பதக்கு நீரில்போட்டு அடுப்பேற்றி யெட்டொன்ருய் வற்றக் காச்சி வடித்துக்கொண்டு அதில் ஒருபடி நல்லெண்ணெய் விட்டு ஒருபலம் கார்போக வரிசியை கியாழம் விட்டு அரைத்துக் கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாகக் காச்சி வைத்துக் கொண்டு மூழ்கிவர குணத்தைக்கேளும். எ-று.

குணமென்னசுரமெட்டு வாய்வுபத்தும்
மணமென்னவாந்தி பித்தம் கிறுகிறுப்பு
வாயுவினுல் வந்ததொரு சோகைபாண்டு
கணமென்னகண்டு குளிர்ச்சி ஊஷ்ணரோகம்
கபாலத்தில் சூடானக்கபநீர்கட்டு
பணமென்னநோய்தீர மருந்துமுண்டோ
பாறுலகின்முளைத்த மூலிகையிற்பாரே.

(இ-ள்) குணம் யாதெனில் சுரம் யெட்டும் வாய்வு பத்தும் மேக தடிப்பும் மூலமுந் தீரும் வாந்தி பித்தம் கிறுகிறுப்பு வாய் வினுல் உண்டாகிய சோகை பாண்டு கண்குளிர்ச்சி ஊஷ்ண ரோகம் கபாலச்சூடு கபம் நீர்கட்டு இவைகள் முதலானதும் தீரும் ஆனுல் ஸ்நானம் செய்யும் நாள் பகல் நித்திரை ஸ்ரீபோகம் மீன் கருவாடு இவைகளை நீக்கவேண்டும் வாரத்திற்கு இரண்டு விசை மூழ்கவும். எ-று.

## சகல சர்ப்ப விஷத்துக்கும் மருந்து

இந்த மருந்தானது முன்னோர்களால் தலை முறைகளாகக் கையாண்டு வரப்பட்டது. மிகவும் அனுபோகமானது. இந்த அவுஷதத்தை யாவரும் செய்து வைத்துக் கொண்டிருந்தால் விஷ மென்பதற்கு எள்ளளவும் பயப்பட வேண்டியதில்லை.

| | | |
|---|---|---|
| வெள்ளைப்பாஷாணம் | விராகனெடை | 1 |
| மனோசிலை | ,, | 1 |
| இரசம் | ,, | 1 |
| துரிசு | ,, | 1 |
| நெல்லிக்காய் கெந்தகம் | ,, | 1 |
| பெருங்காயம் | ,, | 1 |
| வேப்பம் பருப்பு | ,, | 1 |

ஆக தினுசுகள் 7 க்கும் மொத்தம் விராகனிடை 7-ம் சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு விராகனிடை 14-ம் ஆக மொத்தம் 21-விராகனிடையும் கலுவத்தில் போட்டு வெள்ளெருக்கம் பால் ஆழாக்குப் பிடித்து வந்து கொஞ்சங்கொஞ்சமாய் விட்டு அரைக்கவும். மேற்படி ஆழாக்குப் பாலும்விட்டு 2-ஜாமம் அறைத்தபிறகு வேப்பெண்ணெய் ½- ஆழாக்குவிட்டு ஒருஜாமம் அரைக்கவும். மெழுகு பதமாய் அரைத்து வழித்து எருமைக்கொம்பு டப்பியில் வைத்துக் கொள்ளவும். விஷந் தீண்டி வந்தவர்களுக்கு உளுந்துப் பிரமா ணம் எடுத்துவெற்றிலையில் வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இதற்குப்பத்தியம் மோர்சாதம் கொடுக்கவும். அல்லது சுட்டபுளி வறுத்த உப்பு கூடிய மிளகுநீர்சாதம் கொடுக்கவும். அன்றிரவு நித்திரை செய்யக்கூடாது.

விஷம் தலைக்கேறி பற்கிட்டி யிருந்தால் உச்சில் கீறி அந்த கீறலுக்குள் இந்த மருந்தில் உளுந்தளவு வைத்து அழுத்தித்



திரும்பவும் கொஞ்சம் மருந்து வைத்து அழுத்தித் தேய்த்து வட்டமாக ஒட்டுப்பில்லை நறுக்கி உச்சியில் அழுத்தமாக வைத்துக் கட்டி, வெந்நீரில் உளுந்தளவு மருந்திழைத்துப் பல்லை நீக்கி உள்ளுக்குச் செலுத்தவேண்டியது. மூன்றே முக்கால் நாழிகையில் மூர்ச்சையானவன் போல் எழுந்திருப்பான். பத்தியம் முன்போலவே செய்யவேண்டும்.

ஆடு மாடு முதலிய மிருகங்களுக்கு குன்றிமணி யளவு வெற்றிலைச் சாற்றிலாலது வெந்நீரிலாவது இழைத்து மூங்கிற் குழையினால் உள்ளுக்குச் செலுத்தவேண்டியது. குருவையரிசிக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவேண்டும்.

## பத்திய விபரம்

முன் கூறியபடி மனிதருக்கு மருந்துகொடுத்த பிறகு 24-மணிநேரம் வரையில் ஆகாரம், தாகம், நித்திரை இவை கூடாது. அதன் பிறகு குருவையரிசிச் சாதம் மிளகுநீர் இவை கொடுக்கலாம். ஆடு மாடு முதலிய மிருகத்திற்கு கூட 24-மணி நேரம் வரையில் ஆகாரம் வைக்கல் தண்ணீர் இவை காட்டக் கூடாது, அதன் பிறகு கறுப்பு நெல் அல்லது மணக்கத்தை அல்லது குருவையரிசி யெடுத்து கஞ்சிகாய்ச்சி 2-படி கஞ்சிக்கு அதிகப்படாமல் கொடுக்கவும். அதற்குப் பிறகு தாங்கள் வழக்கம்போல் கொடுக்கிற தீனிகொடுக்கலாம்.

## சகல எலிகடிக்கு மருந்து

ஆடுதின்னாப்பாளை வேர், விளாம்பட்டை, மஞ்சள் வகைக்குப் பலம்-¼ சித்திரமூல வேர், உத்தாமணி வேர், மிளகரணை வேர் வகைக்குப் பலம்-1 பசும்பாலி லரைத்து படி எள்ளெண்ணெயில், கலக்கிக் காய்ச்சி வடித்து மூன்று தடவையாக ஐந்து நாள் கொடுத்து உப்பு புளி நீக்கவும்.

### வெட்டைக்குக் கியாழம்

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:— | கொக்குமந்தாரை மேல்பட்டை | பலம் | $\frac{1}{4}$ |
| | கீழ்காய் நெல்லிவேர் | ,, | $\frac{1}{4}$ |
| | சிறு ஆளி வித்து | ,, | $\frac{1}{4}$ |

செய்பாகம்:— இவற்றைப் பஞ்சுபோல் நசுக்கி 1-பழகின குடுவையில்போட்டு 3-ஆழாக்கு சலம்விட்டு அடுப்பில் ஏற்றிச் சிறுதீயில் எரித்து முக்கால் ஆழாக்காகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்க.

உபயோகிக்கும் விதம்:— இந்தக் கியாழத்தை இருபாகமாக பங்கிட்டு அந்தி சந்தி சாப்பிடவும். இப்படி மூன்றுநாள் வரையில் உட்கொள்ளுதல் சாலச் சிறந்தது.

தீரும் வியாதி:— நீர் எரிச்சல், நீர் குத்தல், நீரில் இரத்தம் தந்தி முதலியவைகள் காணுதல் குணமாகும்.

பத்தியம்:— காரத்தைக் குறைந்த அளவில் சேர்த்து இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

### விரணப் பூச்சுத் தைலம்

| | | |
|---|---|---|
| சரக்கு:— | நாயுருவி | கலியாணமுருக்கு |
| | பருத்தி | இன்புரு |
| | கொள்ளு | மஞ்சள் |
| | சிறுவழுதுணம் | புளி |
| | கரிசாலை | சிவதை |
| | பூனைக்காஞ்சொறி | வெட்பாலை |
| | நல்லசுரை | கடுக்காய் |
| | வேம்பு | |

இவைகளினிலைச்சாறு வகைக்கு பலம்-2
நல்லெண்ணெய் படி-1



செய்பாகம்:— மேற்கூறப்பட்ட திரவங்களை எல்லாம் ஒரு தைலபாண்டத்தில்விட்டு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் வரும்போது வடித்துக்கொள்க.

உபயோகிக்கும் விதம்:— இந்தத்தைலத்தை விரணங்களின்மீது காலையில் தடவி மாலையில் அலம்பிவிடவும். இப்படி சிலதினம் செய்ய ஆறுத புண்கள் எல்லாம் ஆறும்.

### பத்திரசார விரணப்பூச்சுத் தைலம்

| | | |
|---|---|---|
| சரக்கு:— | ஆவாரை | வேம்பு |
| | ஊனுன்கொடியிலை | நாயுருவி |
| | வெட்பாலை | பருத்தி |
| | புளியயிலை | தூதுவளை |

இவைகளின் சாறு வகைக்குப் படி 1, 16 வீசம்
நல்லெண்ணெய் படி $\frac{1}{2}$

செய்பாகம்:— மேற்கூறப்பட்டவைகளை ஒரு தைலபாண்டத்தில் விட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் வரும்போது வடித்து வைத்துக்கொள்க.

உபயோகிக்கும்விதம்:— இந்த தைலத்தை விரணங்களுக்குப்பூசி மறுநாள் அரசபட்டைக் கியாழத்தால் அலம்பிவர ஜவ்வினால் வாய் மூடிக்கொண்டு ஆறுமலிருக்கின்ற விரணங்கள் எல்லாம் ஆறும்.

### மேகவிரணத் தைலம்

| | | |
|---|---|---|
| சரக்கு:— | 1. துருசு | பால்துத்தம் |
| | கெந்தகம் | வாலைரசம் |
| | மனோசிலை | கார்போகஅரிசி |
| | நீரடிமுத்து | நீரடிமுத்து |

இவைகள் வகைக்குப் பலம்-$\frac{1}{2}$
2. நல்லெண்ணெய் படி-$\frac{1}{4}$

ஆடுதின்னாப்பாளைச்சாறு ஆழாக்கு
நாகமல்லி இலைச்சாறு ஆழாக்கு

செய்பாகம்:— முதலானது அங்கத்தில் குறிப்பிட்ட ஏழு சரக்குகளில் இரசத்தையும் கெந்தகத்தையும் முதலில் போட்டு அரைத்துக் கறுப்புநிறமாக மாறுதலடைந்தபின் மிகுதியுள்ள வற்றைக் கூட்டி மிருதுவாகும்படி அரைத்து ஒரு தைலபாண்டத்தில்போட்டு இரண்டாவது அங்கத்தில் கூறப்பட்ட திரவங்களைவிட்டு அடுப்பில் வைத்துப் பதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்க.

உபயோகிக்கும் விதம்:— கோழியின் இறகு கொண்டு தைலத்தில் தோய்த்து சொறி, சிரங்கு, புண், விரணம் முதலிய வற்றிற்குத் தடவிவர விரைவில் ஆறும்.

### விரண சஞ்சீவித் தைலம்

| | | |
|---|---|---|
| சரக்கு:— வேப்பெண்ணெய் | பலம் | 5 |
| தலைமயிர் | ,, | 1 |
| வெள்வங்கம் | தோலா | 5 |
| வாலைரசம் | ,, | 3 |

செய்பாகம்:— இவற்றுனுள் முதலில் வெள்வங்கத்தை ஒரு இரும்புக்கரண்டியில் போட்டு அடுப்பில் வைத்து உருக்கி வெளியே எடுத்துச் சிறிது ஆறிவரும்போது வாலைரசத்தைவிட இரண்டும் சேர்ந்து உறவாகிவிடும். இதனைப் பொடிசெய்து வைத்துக்கொள்க. அப்பால் ஒரு இரும்புக்கடாயை அடுப்பில் வைத்து வேப்பெண்ணெயை விட்டுச் சிறுதீயாக எரித்து எண்ணெய் காய்ந்து வரும்சமயம் தலைமயிரைப் பொடியாகக் கத்திரித்துப் போட்டு அயக்கோலால் கிளரிக் கொடுக்கவும். இது நன்றாய்ச் சூடேறினசமயம் வங்கப் பொடியைப் போட்டு அயக்கோலால் கிளரி மயிர் உருகிய சமயம் கீழிறக்கி வடித்து வைத்துக்கொள்க.



உபயோகிக்கும் விதம்:— இத்தைலத்தில் கோழி இரகு கொண்டு தோய்த்து விரணமுள்ள இடங்களில் தடவிவர ஆறும் இன்னும் இந்தத்தைலம் குஷ்டரணம், ஸ்திரீகளுக்கு மர்மஸ்தானத்தில் உண்டான ரணம், கால்கடுவன், ஆசனவிரணம் புழுவெட்டு, வெண்குட்டம் முதலியவற்றிற்கு உபயோகித்து பலன் கண்டதுண்டு.

### புழுவெட்டுத் தைலம்

சரக்கு:— அரசம்வேர்ப்பட்டை
அத்திவேர்ப்பட்டை
எட்டிவேர்ப்பட்டை

செய்பாகம்:— மேற்கூறிய பட்டைகளைக் கொண்டுவந்து நிழலிலேயே 4-5-நாள் உலர்த்திச் சிறுதுண்டுகளாக நறுக்கி வுகைக்கு ஒருவீசைவீதம் ஒருபழகின மட்குடுவையில் போட்டு முறைப்படி குழித்தைலம் வாங்கவும். இதை ஆருத விரணங்களுக்குத் தடவ ஆறும் புழுவெட்டால் முடி உதிருமிடத்தில் தடவ முடி உதிராமல் செழிப்பாக வளரும்.

### ஆருத விரணங்களுக்குக் களிம்பு

பாதரசம் விராகனெடை-2, இலிங்கம் விராகனெடை-2, கெந்தகம் விராகனிடை-2, ஆக கல்வத்தில் போட்டுப் போதிய அளவு பசுவின் வெண்ணெய் கூட்டிக் களிம்பு பதத்திற்கு 2-3-நாள் அரைத்துச் சிமிழில் அடைத்து வைத்துக் கொண்டு விரணங்களின் மேல் தடவிவர விரைவில் ஆறும்.

### வச்சிர கபாடம்

| | |
|---|---|
| சரக்கு:— சாதிக்காய் | சாதிபத்திரி |
| கிராம்பு | வால்மிளகு |
| ஏலம் | சுக்கு |

இவைகள் வகைக்குக் கழஞ்சு-2,

| | |
|---|---|
| வெட்பாலையரிசி | நற்சீரகம் |
| கருஞ்சீரகம் | கோரோசனை |
| அதிவிடயம் | அதிமதுரம் |

வெந்தயம் வகைக்குக் கழஞ்சு-4,

| | |
|---|---|
| அபினி | கழஞ்சு-$\frac{1}{2}$ |

செய்பாகம்:— அபினி நீங்கலாக மற்றச் சரக்குகளை இளந்தீயில் வாசனை கிளம்பச் சிறிது வெதுப்பி இடித்துச் சூரணம்செய்து அபினியுடன் கூட்டிக் கல்வத்தில் போட்டு ஒரு பலம் வெந்தயத்தை ஒரு இரவு தண்ணீரில் ஊறப்போட்டு ஒரு படி தண்ணீர்விட்டு 1/8 படி அளவிற்குக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி யெடுத்த கியாழத்தைக் கொண்டு அரைத்துவருக. இதுமெழுகு பதமாக வரும்போது ஒரே அடையாகத்தட்டி ரவியில் உலர்த்தவும். இந்த அடையை ஒரு அகன்ற சட்டியில் வைத்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து முன்போலிட்ட வெந்தயக் கியாழத்தைச் சுருக்குக் கொடுக்கவும். இந்தக் கியாழம் கொஞ்சம் கைவசம் இருக்கும்போதே கீழிறக்கி ஆரவிட்டு அடையைக் கல்வத்தில்போட்டு மிகுதியுள்ள கியாழத்தால் அரைத்து அடைதட்டி உலர்த்தவும் இப்படி ஆறுமுறை செய்து உலர்த்தி நன்ருய் இடித்துச் சூரணித்து வாயகன்ற சீசாவில் பத்திரப் படுத்துக.

உபயோகிக்கும் விதம்:— இந்தச் சூரணத்தில் வேளைக்கு 10-15-குன்றிஎடை தினம் 2-அல்லது 3-வேளை தகுந்த அனுபானங்களில் கொடுத்து வருக.

தீரும்வியாதி:— நாட்சென்ற மூலரத்தம், கிராணி, அதிசாரம், முளைமூலம், வயிற்றுளைச்சல், வயிற்றுக்கடுப்பு இவைகள் குணமாகும்.



### விரணங்களுக்குச் சிகிச்சை

சுமார் 30-40 கும்பிடு சிப்பிகளைக் கொண்டுவந்து 20-30 வறட்டிகளின் நடுவில் வைத்துப் புடம்போல் அடுக்கித் தீமூட்டி ஆறவிட்டுப்பார்க்கச் சுண்ணமாகும் இதில் தேவையான அளவு எடுத்துப் பசுவின் வெண்ணெய் கூட்டிக் கெட்டிப்பதமாக அரைத்து வைத்துக் கொள்க, வேண்டும்போது கொஞ்சம் எடுத்து காட்டாமணக்குப் பால்விட்டுக் குழைத்து மேற்றடவிவர கிரந்தி, புண், அரையாப்புரணம், புற்று புரையோடும் ரணங்கள் குணமாகும்.

### கலங்கின கண்ணுக்கு

ஊமத்தயிலையைக் கசக்கி 3-துளி கண்ணில்விட்டு, நின்ற திப்பிலியும். 3-மிளகு வைத்தரைத்து கட்டவும் குணம்.

### காதுப் புழு விழ

பிரண்டைச்சாறும், எலுமிச்சம் பழச்சாறும் சமன்கூட்டிக்காதிலிட புழுசெத்து விழும்.

### வாய் நாற்றத்திற்கு

கோஷ்டம், கருங்காலித்தோல், செருப்படை, பொடுதலை இவை நான்கையும் சமனெடையாகப் பொடி செய்து தண்ணீரிற் காய்ச்சி கொப்பளிக்க வாய் நாற்றம் நீங்கும்.

### கல்லடைபுக்கு

12-தேத்தாங் கொட்டையை கறுப்பு வெள்ளாட்டின் பாலிலரைத்து நாழி பாலில் கொள்ள 3-நாழிகையில் கல் முறிந்துவிழும்.

### வேறு

நெருஞ்சிக்காயும், வெள்ளறுகும் பசும்பாலிற் கொள்ள குணமாகும்.

### வேறு

நற்சுரயிலையை வாட்டிப் பிழிந்து1-காசளவு வெங்காரமும் பொரித்து சர்க்கரையுங் கூட்டிக் கொடுக்க கல் விழும்.

### சுகபேதிக்கு

சுக்கு; காக்கட்டான் வித்து, சூரத்து நிலாவரை, கடுக்காய், வசம்பு, சோம்பு, பன்னீர்ப்பூ, ரேவல்சின்னி வகைக்கு பலம் 1, சிவதைவேர் பலம்-8 இவைகளைச் சூரணித்து தேகதிட மறிந்து 1-அல்லது 2-விராகனிடை வாயிலிட்டு வெந்நீருண்ண பேதியாகும்.

### மஞ்சட் காமாலைக்கு

வெள்ளைப் புல்லாந்திங் கொழுந்து எலுமிச்சங்காயளவு எருமைத் தயிர்வார்த்தரைத்து மேற்படி தயிரிற்கூட்டி 3-நாள் கொள்ளவும். உப்பு புளி நீக்கவும்.

### வெள்ளெழுத்துக்கு

1-படி பாலில் 1-படி தண்ணீர்விட்டு 40-மிளகை அரைத்துப் போட்டு கலக்கிக் காய்ச்சி வெண்ணெயை யெடுத்து கல்வத்திற்போட்டு, ஒரு பணவெடை கற்பூரமும் கலந்து நெகிழ அரைத்துச் சிமிழில் பத்திரப்படுத்தி கொஞ்சங் கொஞ்சமாய்க் கண்ணுக்கு யிட்டுக் கொண்டுவர நல்லது.

### லிங்கச் சோர்வுக்கு

எட்டிக் கொட்டை அமுக்கனுங் கிழங்கு, வசம்பு, சமனெடையாகப் பசு வெண்ணெயி லரைத்து லிங்க நரம்புமீது 7-நாள் தேய்த்துவர சோர்வு நீங்கி வலிவு தரும்.

### தேன்கொட்டுக்கு

உள்ளி தைலத்தில் பெருங்காயம் யிழைத்துத் தடவ கொட்டுவாய் குளிரும்.



சகோதரர்களே!

தேசங்கள்தோறும் வழங்கி வருகின்ற எடைபாகங்களில் அளத்தல், நிறுத்தல் முதலியவைகள் ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருக்கும். அவிழ்தங்களைச் செய்யும்போது அளவுமிஞ்சினும் சரி, அல்லது குறையினும் சரி, மருந்து கெட்டுப் போவதுடன் பிணியாளருக்கு ஆபத்தை யுண்டாக்கும். இந்நூலில் கூறப்பட்டுள்ள எடை பாகங்கள் எல்லாம் சென்னையில் உபயோகப்படுத்தப் பட்டவைகளாகும். ஆதலால் இந்நூலின்படி அவிழ்தங்களை முடிக்கும் போதும் அல்லது அளவின்படி உள்ளுக்குக் கொடுக்கும்போதும் எவ்வித சந்தேகமும் இல்லாமல் தெரிந்து கொள்ளும்படி அடியில் சிலவாய்பாடுகளைக் குறிப்பிட்டிருக்கிறது. அதன்படி பண்டிதர்கள் சிறிதும் வழுவாது செய்து நற்பயனை அடைவார்கள் என்று நம்புகின்றேன்.

### அளத்தலளவை

| | | |
|---|---|---|
| 60-துளி | | தேக்கரண்டி-1 |
| 8-தேக்கரண்டி | | அவுன்ஸ்-1 |
| 24-அவுன்ஸ் | | பிராந்திபுட்டி-1 |
| 2-புட்டி | | படி-1 |
| 6-அவுன்ஸ் | | ஆழாக்கு-1 |
| 2-ஆழாக்கு | ($\frac{1}{4}$,படி) | உழக்கு |
| 4-ஆழாக்கு | | படி-$\frac{1}{2}$ |
| 4-உழக்த | அல்லது 8-ஆழாக்கு | படி-1 |
| 8-படி | | மரக்கால்-1 |

### நிறுத்தலளவை

1

| | |
|---|---|
| 1-ரூபாய் | தோலா-1 |
| 3-தோலா | பலம்-1 |
| 8-பலம் | சேர்-1 |

| | | |
|---|---|---|
| 5-சேர் | | வீசை-1 |
| 8-வீசை | | மணங்கு-1 |

2

| | | |
|---|---|---|
| 2-உளுந்து எடை | | குன்றி-1 |
| 3-குன்றி | | பணவெடை-1 |
| 32-குன்றி | | விராகனிடை-1 |
| 40-குன்றி | | கழஞ்சு-1 |
| 10-விராகனிடை | | பலம்-1 |
| 8-கழஞ்சு | | பலம்-1 |

3

| | | |
|---|---|---|
| 9-அரிசி எடை | | குன்றி-1 |
| 2-அரிசி எடை | | துவரம்பருப்பு-1 |
| 3-சிட்டிகை | (3-விரலளவு) | திரிகடி-1 |

### பத்தியத்திற் கானவகைகள்

அத்திப் பிஞ்சு, அவரைப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, முள்ளிப் பிஞ்சு, வழுதலம் பிஞ்சு, கண்டங்கத்தரிப் பிஞ்சு, சிறு கீரை, பொன்னுங்காணிக் கீரை, பரட்டைக் கீரை, புளியாரை, ஆவின்பால், நெய், சிறுபயறு, துவரை, சீயக்கொழுந்து வெள்ளாட்டிறைச்சி, முயல், காடை, மான், சுராமீன், குரவை, வரால், தேளீ, கெளிரு இவைகளாகும்.

### பத்தியத்திற் காகாதவைகள்

சுரக்காய், பாவற்காய், பயிற்றங்காய், பூசனிக்காய், கடலை, அவரை, பெரும்பயறு, காட்டுப்பாகற்காய், மாங்காய், கொள்ளு, அகத்திக்கீரை, நல்லெண்ணை, புளி, கடுகு, தேங்காய், சாராயம், கள்ளு, புகை, கோழி, பன்றி, உளுவை, விலாங்கு, கூளிக்கெண்டைகள் இவைகளாகாது.

இரண வைத்தியம் முற்றிற்று.